Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

நாவிற்கு ருசியும்
உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக்
கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருதெனியா.

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம். பிலவ கார்த்திகை 14 ஆம் நாள் ஜ. ஆகிர் 20 (29-11-61) புதன்கிழமை இதழ் 246

# சிங்களத்தில் பதில்!

## காரியாலயங்களுக்கு அரசாங்கம் உத்தரவு

## ஆனல் மொழிபெயர்ப்பு இணைக்கப்படும்

### உத்தியோகமொழிபற்றி உயர்தர மகாநாடு

கொழும்பு, செவ்வாய்

தொழிற்பங்கங்களிடமிருந்து அரசாங்க காரியாலயங்களுக்கு ஆங்கிலத்தில் அல்லது தமிழில்வரும் கடிதங்களுக்கு சிங்களத்தில் பதிலனுப்பவேண்டுமென்று அரசாங்க காரியாலயங்களுக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. ஆனல் கடிதம் எழுதப்பட்ட மொழியில் சிங்களத்தில் எழுதப்படும் பதிலின் மொழிபெயர்ப்பு இணைக்கப்படவேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.

### அமைச்சர் கூட்டும் மகாநாடு

அரசாங்க அலுவல்களை உத்தியோக மொழிக்கு மாற்றும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதுபற்றி ஆராய்வதற்காக நீதியமைச்சர் திரு. சாம். பி. ஸி. பெர்னுண்டோ, நிரந்தரக்காரியதரிசிகள், அரசாங்க இலாகாத் தலைவர்கள், மற்றும் உயர்தர அரசாங்க அதிகாரிகள் ஆகியோரைக்கொண்ட ஒரு மகாநாட்டைக் கூட்டுகின்றர்

இந்த மகாநாடு டிசம்பர் மாதம் 31ந் திகதி கொழும்பு றேயல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்த மகாநாட்டுக்குச் சாத்தியமான அளவு அதிக உத்தியோகத்தர்களை அனுப்பும்படி நிரந்தரக்காரியதரிசிகளை அமைச்சர் கேட்டுள்ளார்,

தொழில்நுட்பத் துறையிலும், சட்டத்துறையிலும் உத்தியோக மொழியில் அலுவல்களைச் செய்வதற்கான வழிவகைகளை உத்தியோகமொழி இலாகாவைச் சேர்ந்த நிபுணர்களிந்த மகாநாட்டில் விளக்கிக் கூறுவார்களென்றும் நீதியமைச்சர் தெரிவித்துள்ளார். உத்தியோக மொழியில் அலுவல்களைச்செய்வதில் அன்றுடம் ஏற்படக்கூடிய பிரச்னைகள் பற்றியும் மகாநாடு ஆராயும்.

சென்ற வருடத்தில் உத்தியோக மொழியில் அலுவல்கள் நடைபெற்றது சம்பந்தமான முன்னேற்றம்பற்றி அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் நிரந்தரக் காரியதரிசிகளை நீதிஅமைச்சர் கேட்டுள்ளார்.

## 'சிங்களம் மட்டும்' கொள்கை ஏன் அமுலாகவில்லை?

### கண்டுபிடிக்குமாறு மந்திரி உத்தரவு

கொழும்பு, புதன்

பெருந் தொகையான அரசாங்க இலாகாக்களில் அரசாங்கத்தின் மொழிக் கொள்கை ஏன் அமுல் நடத்தப்படாமலிருக்கிறது என்பதைப் பற்றி விசாரணை நடத்துமாறு உத்தியோக மொழிக் கமிஷனருக்கு நீதிமந்திரி உத்தரவிட்டிருக்கிறர்.

சிங்களத்தை உபயோகிப்பதில் அவைகளுக்கு என்ன கஷ்டங்கள் இருக்கிறதென்பதை அறியுமாறும் அவர் உத்தரவிட்டிருக்கிறர். மந்திரிக்குக் கிடைத்த ஏராளமான முறையீட்டைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் சகல இலாகாக்களும் தங்கள் அறிக்கைகளையும் கடிதங்களையும் சிங்களத்தில் எழுத வேண்டுமென எதிர் பார்க்கப்பட்டது.

வருகிற டிசம்பர் 31-ந் திகதி உத்தியோக மொழிபற்றிய ஒரு விசேஷ மகாநாடு நடைபெறவிருக்கிறது. நீதிமந்திரி இதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறர். அடுத்த இரண்டு வருடங்களுக்குள் பூரணமாக "சிங்களம் மட்டும்" கொள்கையை அமுல் நடத்துவது சம்பந்தமாக இம்மகாநாடு ஒரு திட்டத்தைத் தயாரிக்கும்.

## அல்ஜீரியாவில் மீண்டும் கைகலப்பு

### 10 பேர் பலி; 30 பேருக்கு காயம்

அல்ஜியர்ஸ், நவ. 28

அல்ஜீரியாவில் இன்று மீண்டும் ஐரோப்பியர்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே துப்பாக்கிகளும், கத்திகளும் கொண்டு நடைபெற்றகைகலப்பில் 10 பேர் பலியாயினர். 30 பேர் காயமடைந்தனர். மேலும் 23 பிளாஸ்டிக்குண்டுகளும் வெடித்தன. சென்ற 3 நாள் கலவரத்தில் 26 பேர் பலியாகினர். 100க்கு அதிகமானேர் காயமடைந்தனர். ஓரானில் டாங்கிகளும், ஆயுதக் கார்களும் ரோந்து வந்தன.

## ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமைபெற இயக்கம்

### 'ஜாதிகுரு சங்கமய' பிரதிநிதிகள் ஆராய்வர்

கொழும்பு, புதன்

லங்கா ஜாதிக குருசங்கமயவின் 120 கிளைகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் அடுத்த மாத ஆரம்பத்தில் கொழும்பில் கூடி அரசியல் உரிமை பெறுவதற்கான இயக்கம் ஒன்றை ஆரம்பிப்பதுபற்றி ஆராய்வார்கள். சங்கத்தின் சகல அங்கத்தினர்களும் தற்போது கல்வி டைரக்டர் நிர்வாகத்திலுள்ள பாடசாலைகளின் ஆசிரியர்களாவார்கள். முன்பு இவர்கள் அரசியல் உரிமைகளை அனுபவித்தவர்கள்.

நாடு முழுதும் இதுசம்பந்தமான இயக்கம் நடைபெறுமென்றும், அரசியல் உரிமை கோருவதின் நியாயம்பற்றி ஒவ்வொரு பெற்றேருக்கும் அறிவிக்கப்பட்டிருப்பதாயும் சங்க அதிகாரி ஒருவர் கூறினர். பிரதமருக்கு ஏராளமானேர் கையெழுத்திட்ட மகஜர் ஒன்றும் இதுசம்பந்தமாக அனுப்பப்படும் எனவும் அவர் கூறினர்.

## எம். பி. சவாலை ஏற்கிறர்

கொழும்பு, செவ்வாய்

ஸாகிராக்கல்லூரியை அரசாங்கம் மேற்கொண்டது சம்பந்தமாக தம்முடன் போட்டியிட வருமாறு திரு அமீர் விடுத்த சவாலைத் தாம் ஏற்றுக்கொண்டிருப்பதாய் மூதூர் எம். பி. திரு. மஜீத் கூறினர். மூதூர் முதலாவது எம்.பி. திரு. ஏகாம்பரம் காலமானதால் ஏற்பட்ட காலிஸ்தானத்துக்குத் தாம் போட்டியிடப்போவதாயும் அவர் கூறினர்.

## கோஷ்டிப் பிரிவினையே காரணம்

கொழும்பு, செவ்வாய்

கோஷ்டிப் பிரிவினையே சமீபத்தில் வெலிக்கடை சிறையில் ஏற்பட்ட பலாத்கார சம்பவத்துக்குக் காரணம் என ஸ்தல சிறை விஜயக்கமிட்டி தெரிவித்துள்ளது நீண்டகால சிறைக்கைதிகள் தடைசெய்யப்பட்ட அபின், கஞ்சா ஆகிய பொருட்களை சிறைக்குள் விற்று வந்தது சம்பந்தமாகவே இந்த போட்டி மனப்பான்மை ஏற்பட்டிருந்ததாம்.

## சீக்கியர் பற்றிய கமிஷன்

புதுடில்லி, நவ. 28

சீக்கியர்மீது பாரபட்சம் காட்டப்படுவதாய்க் கூறப்படுவதையிட்டு விசாரணை நடத்தவிருக்கும் கமிஷன், தன் முதலாவது கூட்டத்தை இன்று புதுடில்லியில் நடத்தியது. ஆயினும் இதுபற்றி இன்று எவ்வித புகாரும் தாக்கலாகவில்லை. கமிஷன் தன் அடுத்த கூட்டத்தை ஜனவரி 3ம் தேதிக்கு ஒத்திவைத்தது.

## இன்றைய சமாதான சபைக் கூட்டம்

கொழும்பு, செவ்வாய்

அணுபரிசோதனைகளை நிறுத்துமாறு இலங்கை சமாதான சபை நாளை இங்கு நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் வல்லரசுகளைக் கோரும். திரு. இலங்கரத்தின தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பிரதமரும் கலந்துகொள்வார். ககாரின் வானவெளிப் பிரயாணம்பற்றிய திரைப்படமும் காட்டப்படும்.

## ககாரின் தம்பதிகளுக்கு வரவேற்பளிக்க துரித ஏற்பாடு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவிருக்கும் ரஷ்ய வான வெளி வீரர் மேஜர் ஜூரி ககாரினுக்கு உள்ளூர்த் தேக்க மரத்தில் தயாரிக்கப்பட்ட கைத்தடி ஒன்றையும் திருமதி ககாரினுக்கு சித்திர வேலைப்பாடோடு கூடிய வெள்ளி புரோச் ஒன்றையும் பரிசுகளாக அளிக்கவும் ஏட்டில் எழுதப்பெற்ற வாழ்த்துப் பத்திரம் வாசித்தளிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

டிசம்பர் 10ம் திகதி இங்கு வருகை புரியும் மேஜர் ககாரினுக்கு மகத்தான வரவேற்பளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்காக உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம் தலைமையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவு செய்யப்பட்டன.

கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட காரியாதிகாரி, யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர், வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. அமிர்தலிங்கம், கல்லூரி அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட விபரங்கள் வருமாறு: விளையாட்டுக்களில் முன்னணியில் நிற்கும் ஒரு மாணவனும் மாணவியும் மேஜர் ககாரினையும் அவரது மனைவியையும் பலாலி விமான நிலையத்தில் மலர்மாலை அணிவித்து வரவேற்பார்கள். விமான நிலையத்துக்கு அருகிலுள்ள மாணவர்களும் விமான நிலையத்தில் கூடி அவர்களை வரவேற்பார்கள்.

வானவெளி வீரரும் அவரது மனைவியும் பின்னர் விமான நிலையத்திலிருந்து திறந்த ஜீப்பில் காங்கேசன்துறை, தெல்லிப்பளை, சுன்னகம், கொக்குவில் வழியாக யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டு பின்னர் திருநெல்வேலி, உரும்

(8 பக்கம் பார்க்க)

## இன்று யூகோ தினம்

கொழும்பு, புதன்

இன்று யூகோஸ்லேவியாவின் தேசியதினம். கொழும்பிலுள்ள யூகோ தூதரும் அவரது பாறயாரும் இது சம்பந்தமாக ஒரு வரவேற்பு நடத்துவார்கள்.

# சாரங்கள் இறக்குமதிக்கு தடைசெய்ய கோரிக்கை

கொழும்பு, செவ்வாய்

சாரங்கள் இறக்குமதிக்கு உடனடியாகத் தடை விதிக்க வேண்டுமென்று அகில இலங்கைக் கைத்தொழில் பிரசார சங்கம் அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

நாட்டின் தேவைக்கும் அதிகமாக உள்நாட்டில் சாரங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவென்றும் இவைகளில் பெரும்பாலானவை விற்பனையாகாமலிருப்பதற்கு வெளிநாட்டிலிருந்து சாரங்கள் அதிக அளவில் இறக்குமதி செய்யப்படுவதுதான் காரணமென்றும் சங்கம் கருத்துத் தெரிவித்துள்ளது.

உள்நாட்டுச் சாரம் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதால் வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரித்துள்ளதென்றும் இப்பிரச்சினையைத்தீர்க்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

இதுசம்பந்தமாக பிரதம மந்திரியையும் கைத்தொழில் மந்திரியையும் சந்திப்பதற்கு சங்கத்தலைவர் திரு. ஜி. பி. காரியவாசம் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டுள்ளது.

## நாடுமுழுவதிலும் காய்கறி நிலையங்கள்

கொழும்பு, செவ்வாய்

நாடு முழுவதிலும் காய்கறி நிலையங்கள், காய்கறிகள் வாங்கும் நிலையங்கள் ஆகியவற்றை வெகு விரைவில் அரசாங்கம் நிறுவவிருக்கிறது.

காய்கறிகளின் விலைகளைக் குறைக்கவும் வாழ்க்கைச் செலவு உயர்வைக் குறைக்கவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உணவு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின செய்த முடிவுக்கிணங்கவே காய்கறி நிலையங்களை அரசாங்கம் திறக்கவிருக்கிறது.

இத்திட்டத்தின்படி நவகமுவ, திஸமகாராம, வெலிகம, ரிக்கிலிகஸ்கமுவ, ஹட்டன் ஆகிய ஐந்து இடங்களில் முதலில் இந்நிலையங்கள் நிறுவப்படவுள்ளன.

காய்கறி கொள்வனவு செய்யும் நிலையங்களை கொழும்பில் விஸ்தரிக்கவும் உணவு அமைச்சு முடிவுசெய்துள்ளது.

## பவல்சின் புதிய பதவி

வாசிங்டன், நவ. 28

அமெரிக்க உதவி ராஜாங்க காரியதரிசி பதவி வகித்து வந்த திரு. செஸ்டர் பவல்ஸ் இப்பொழுது ஆபிரிக்க ஆசிய விவகாரங்களுக்கு ஜனதிபதியின் விசேஷ தூதராகவும் ஆலோசகராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

## நம்புக்கணையில் பெரியம்மை

கொழும்பு, செவ்வாய்

நம்புக்கணைப் பகுதியில் நேற்று மற்றொருவர் பெரியம்மை நோயினல் மரணமானரென அறிவிக்கப்படுகிறது.

குருநாகலை பகுதியில் பெரியம்மை நோய் பரவியகாலத்தில் நம்புக்கணைப் பகுதியிலும் பெரியம்மை நோய் பரவியிருந்ததாகக் கூறப்படுகிறது.

## சுத்தானந்தருக்கு வவனியாவில் வரவேற்பு

வவனியா, செவ்வாய்

யோகி சுத்தானந்தருக்கு வவனியாவில் இம்மாதம் 30-ம் திகதி ஓர் பொது வரவேற்பளிக்க "சுந்தானந்த இந்து இளைஞர் சங்கம்" சகல ஒழுங்குகளையும் செய்து வருகின்றது. அன்று பி. பகல் 3-30 மணிக்கு சுந்தானந்தரை வவனியா கண்டிரோட்டில் உள்ள பௌத்த விகாரையில்வைத்து வரவேற்று ஊர்வலமாகக் கூட்டம் நடைபெற இருக்கும் பட்டின சங்க மண்டபத்துக்கு அழைத்துச் செல்வர். கூட்டத்துக்கு வவனியாப் பட்டின சபைத் தலைவர் திரு. எஸ். சுப்பிரமணியம் தலைமைவகிப்பார்.

# கணக்கப்பிள்ளை துண்டுதுண்டாக வெட்டப்பட்டுக் கொலை

## அட்டாம்பிட்டிய தோட்டத்தில் சம்பவம்

பண்டாரவளை, செவ்வாய்

கடந்த புதன்கிழமை அட்டாம்பிட்டிய தோட்டம் 2வது டிவிசன் பெரிய கணக்கப்பிள்ளை வேலு என்பவர் கத்தியால்வெட்டப்பட்டுக் கொலை செயயப்பட்டார்.

கொலையுண்ட கணக்கப்பிள்ளையின் தலையும் முகமும் துண்டுதுண்டாக வெட்டிப் போடப்பட்டிருந்தது. கையும் துண்டாடப் பட்டிருந்தது. வேலைத்தலத்திற்குப் போய்க்கொண்டிருந்த கணக்கப் பிள்ளையை ரோட்டின் ஒரு முடக்கில் வைத்து கொலை செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

மரண விசாரணை அதிகாரியின்முன் நடந்த விசாரணையின்போது சாட்சியமளித்த தனுஷ்கோடி என்பவர் கணக்கப்பிள்ளையை சிவனு என்பவர் வெட்டும்போது தான் கண்டு கூக்குரலிட்டதாகவும் அதன்பின்பே ஆட்கள் ஓடிவந்ததாகவும் குறிப்பிட்டார். மற்றும் சிலர் சாட்சியமளித்தபின் மேற்கொண்டு எல்லா விசாரணையும் கோர்ட்டில் நடைபெறுமென நீதிபதி தெரிவித்தார்.

சந்தேகத்தின்மீது அதே தோட்ட வாசியான சிவனு என்பவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டார். புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## 28 மைல் சைக்கிள் ஓட்டப்போட்டி

யாழ்ப்பாணம், புதன்

சுன்னகத்தில் நடைபெறும் களியாட்டு விழாவையொட்டி யாழ்ப்பாண மாவட்ட 28மைல் சைக்கிள் ஓட்டப்போட்டியொன்று அடுத்த மாதம் 3ந்திகதி நடைபெறவிருக்கிறது.

இப்போட்டியை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. என். சிவஞானசுந்தரம் ஆரம்பித்துவைப்பார்.

இச் சைக்கிள் ஓட்டப்போட்டி டிசம்பர் 3ந் திகதி காலை 6 மணிக்கு சுன்னகத்திலிருந்து ஆரம்பமாகி காங்கேசன் துறை வீதிவழியாக காங்கேசன் துறை சென்று அங்கிருந்து பலாலிச் சந்தியை அடைந்து பலாலி - யாழ்ப்பாண வீதி வழியாக யாழ்ப்பாணம் சென்று அங்கிருந்து மீண்டும் சுன்னகம் சேருவதோடு முடிவடையும்.

# யோக சமாஜம் மனிதகுலம் வாழ வழிவகுக்கும்

## மாத்தளையில் சுத்தானந்தர் உரை

மாத்தளை, செவ்வாய்

"இன்றைய உலகில் கடவுளை நம்பாதவர்கள் நூற்றுக்கு எண்பத்தைந்து விதமானேர் இருக்கின்றனர். "மார்க்கோனி ரேடியோவைக் கண்டுபிடித்து பெருமை அடையும்போது அதற்கு அப்பால் உள்ள மின்னல் — இடி ஆகியவற்றல் ரேடியோ செயல் அற்று போவதைக்கண்டு தன்னிலும் மிஞ்சிய சக்தி இருப்பதைக் கண்டு அஞ்சினன்".

இவ்வாறு மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் மண்டபத்தில், மாத்தளை சைவ மகா சபையாரின் சார்பில், சுத்தானந்த பாரதியார் "சேர வாரும் செகத்தீரே" என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்துகையில் கூறினர்:

கோயில் முன்றிலில் சுத்தானந்தர் பலராலும் மாலை சூட்டி வரவேற்கப்பட்டார். பாக்கிய வித்தியாசாலை மாணவிகள் வாழ்த்துப்பாடல் பாடினர். இச்சபையின் பொருளாளர் திரு. த பாலச்சந்திரன் வெள்ளிப் பேளையொன்றை அவருக்கு வழங்கினர்.

திரு. அ விவேகானந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் கவியோகி மேலும் பேசியதாவது:

கடவுளுக்கு பெயரில்லை, உருவமில்லை. சிவம் என்பது காக்கும் பெருள் எனலாம். பஞ்ச கிருத்தியங்களை கடந்ததே சிவம். சரியைக் கொண்டதே புத்தமதமும், சமணமதமும். கிரியைக் கொண்டதே இஸ்லாம் மதம். ஒழுக்கமும, அன்பும் சரியையாகும். பண்பாடு கிரியையாகும். சைவமதத்தின் அடிப்படையே புத்தமதமாகும்.

ஜப்பான் நாட்டிலே உள்ள மக்கள் வைகறையிலே 4 மணிக்கே எழுந்து தங்கள் காலைக்கடன்களை செய்கிருர்கள். ரஷ்ய நாட்டிலே ஞாயிற்றுக்கிழமைகளில் அநேக மக்கள் ஆலயவழிபாட்டிற்கு செல்கிருர்கள்.

யோகசமாஜம் ஒன்றே மனித குலம் வாழ வழி வகுக்கும். அதோடு புத்தரைப் போன்ற கருணை உள்ளம் வேண்டும். எல்லா மதங்களும் சைவத்திலிருந்து பிரிந்து சென்றதென்பதை நாம் அறிகிறோம்.

# இரண்டாவது திறந்த வெளிச் சிறைச்சாலை

## அனுராதபுரத்தில் வேலை ஆரம்பம்

கொழும்பு, செவ்வாய்

பலேகெல்ல என்ற இடத்திலுள்ள திறந்த வெளிச் சிறைச் சாலையைப் போன்ற மற்றொரு சிறைச்சாலையை அமைக்கும் வேலையை சிறைச்சாலைப்பகுதியினர் அனுராதபுரத்தில் ஆரம்பித்துள்ளனர். இந்த திறந்த வெளிச் சிறைச்சாலையில் 200 கைதிகளுக்கு இடவசதியிருக்கும்.

கைதிகளுக்கு வசதியளிக்கும் அபிவிருத்திட்டத்தின் ஒரு அம்சம்தான் இந்த திறந்தவெளிச் சிறைச் சாலை.

அனுராதபுரத்தில் திறந்த வெளிச் சிறைச்சாலை அமைக்கப்படும் வேலை முடிவடைந்ததும் குறுகியகால சிறைத் தண்டனை பெற்ற கைதிகளிலிருந்தும் நன்னடத்தையுடைய கைதிகளிலிருந்தும் 200 கைதிகள் தெரிவு செய்யப்பட்டு அங்கு அனுப்பப்படுவார்கள். இவர்கள் அங்கு விவசாயம், கோழி வளர்ப்பு, செங்கல், ஓடுதயாரிப்பு ஆகியவேலைகளில் ஈடுபடுவர். முதியோர் கல்வி, நூல்நிலைய வசதிகளும் அங்கு அளிக்கப்படும்.

பலேகெல்ல என்ற இடத்தில் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்பட்ட திறந்தவெளிச் சிறைச்சாலை பூரணவெற்றியளித்துள்ளதாம்.

# அனதைகளுக்குப் புனர்வாழ்வு

## சமூகசேவை இலாகாவின் புதிய திட்டம்

கொழும்பு, செவ்வாய்

சமூக சேவை வேலைகளுக்கு வெறும் நிதி உதவி அளிப்பதிலிருந்து வேறு உதவிகள் அளிக்கும் திட்டம் பற்றி ஆராய்வதற்கென சமூகசேவை அதிகாரிகளின் இரண்டு நாள் மகாநாட்டுக்கு சமூக சேவைப் பகுதி அதிகாரி திரு. பி. பி. உடுவெல ஏற்பாடு செய்துள்ளார்.

புதிய திட்டத்தின்படி ஏழைகள், அனதைகள், நோயாளிகள், வயோதிபர்கள் ஆகியோருக்கு மூடிக்குரிய காணிகளிலிருந்து நிலம் வழங்கவும் அவர்களுடைய பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பவும் வசதி கிடைக்கும்.

இந்த மகாநாடு டிசம்பர் 15, 16-ந் திகதிகளில் நடைபெறும். இந்த மகாநாட்டின் பின் புதியதிட்டத்தை அமுல் நடத்துவதற்கென சமூகசேவை உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு பிரதேச பயிற்சி நிலையங்களை சமூகசேவை இலாகா அமைக்கும்.

சமூகசேவை இலாகாவிலிருந்து நிதி உதவிபெறுபவர்கள் தங்கள் வாழ்க்கையை சீரமைத்துக் கொள்ள சமூக சேவை இலாகா உத்தியோகத்தர்கள் உதவி புரிவதும் புதிய திட்டத்தில் ஒரு அம்சமாகும்.

## கியூபா புகாருக்கு மறுப்பு

ட்ரினிடாட், நவ. 28

டாக்டர் பிடல் காஸ்ட்ரோவின் கியூபா அரசாங்கத்துக்கெதிராக டொமினிக்கன் குடியரசை அமெரிக்கா ஆயுத்தம் செய்வதாக கியூபா சாட்டிய குற்றச்சாட்டை ஐ. நா. வில் அமெரிக்காவின் நிரந்தரப் பிரதிநிதியான திரு. அட்லாய் ஸ்டீவன்சன் மறுத்தார்.

# கிணற்றில் தவறி வீழ்ந்த மாணவி

## பொந்துள் அகப்பட்டு மாண்டார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வட்டுக்கோட்டை மேற்கைச் சேர்ந்த முத்தையாவின் மகள் செல்வமலர் என்ற 14 வயது மாணவி கிணற்றில் வீழ்ந்த காரணத்தால் மரணமானர்.

இது சம்பந்தமாக திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினர்.

இறந்தவரின் தாயார் நாகம்மா சாட்சியமளிக்கையில் தானும் இறந்தவரும் பக்கத்து வளவிலுள்ள கிணற்றில் குளிப்பதற்குச் சென்றதாகவும் குளித்துக்கொண்டு இருவரும் நிற்கும்போது மகள் தவறுதலாக கிணற்றுள் வீழ்ந்ததாகவும் ஆனல் அவர் மேலே வரவில்லையெனவும் தான் போட்ட பெருத்த கூச்சலைக் கேட்டு அங்குவந்தவர்கள் கிணற்றுள் மூழ்கித் தேடிப் பார்த்ததாகவும் இறுதியில் கிணற்றுப் பொந்திலிருந்து குற்றுயிராக வெளியே எடுத்த சிறிது நேரத்துள் அவர் மரணமானரெனவும் தெரிவித்தார்.

இன்னும் சிலர் சாட்சியமளித்தனர.

# இரண்டு மனைவிகளின் கணவர் தற்கொலை

## குடிப்பழக்கத்தினல் வெறுங்கையானர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

அச்செழுவைச் சேர்ந்த அம்பலம் சீனி என்ற சலவைத் தொழிலாளி நஞ்சுண்டு தற்கொலை செய்துகொண்டார். இவருக்கு வயது 60.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினர்.

இறந்தவரின் தாயார் பார்வதி சாட்சியமளிக்கையில் பின்வருமாறு தெரிவித்தார்:-

இறந்தவருக்கு இரு மனைவிகள் இருக்கின்றனர். ஒரு வருடத்துக்குமுன் இரண்டாவது மனைவியையும் விட்டுப் பிரிந்திருந்தார். மிதமிஞ்சிய குடிவெறியே இதற்குக் காரணம்.

மூத்த மனைவிக்கு ஒரு மகளும் இரண்டாவது மனைவிக்கு ஒரு மகனும் இவருக்குஉண்டு. கடந்த சில காலமாக இவர் தனிக்குடித்தனம் நடாத்திவந்தார். குடிவெறி காரணமாக கையிலிருந்த பணம் முழுவதையும் செலவுசெய்து வெறுங்கையோடிருந்தார். இதனல் சிறிது கஷ்டமடைந்திருந்தார். சம்பவம் நடைபெறுவதற்கு முதல்நாள் நான் இவர்இருந்த வீட்டிற்குச் சென்றேன். "என்னை எங்கே விசாரிக்க மாட்டீர்கள் நாளைக்கு வந்து பாருங்கோ, கடிதம் எழுதி வைத்திருக்கிறேன்" என்று என்னிடம் கூறினர். இவர் வழக்கம்போல் குடித்துவிட்டு அலட்டுகிருர் என்று நினைத்து அவர் சொன்னவற்றை அசட்டை செய்துவிட்டுச் சென்றுவிட்டேன்.

மறுநாட்காலை அங்கு சென்றேன். இவர் படுக்கையில் துயின்று கொண்டிருப்பது போல் தெரிந்தது. அவரது உடலைத் தொட்டுப்பார்த்தேன். குளிர்ந்திருந்தது. வாசற்படியில் மூடி திறந்திருந்த பேணியொன்றும் இருந்தது.

சீனிவாசகமும், சிறுப்பிட்டி கிராமாதிகாரியும் சாட்சியமளித்தனர். டாக்டர் கே. அருமைநாயகம் பிரேத பரிசோதனை நடத்தினர். இறந்தவர் எழுதி வைப்பதாகச் சொல்லிய கடிதத்தைப் பலர் தேடிப்பார்த்தபோதும் கிடைக்கவில்லையாம். தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

விபத்தினல் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# தோட்ட தொழிலாளர்களின் சுகாதாரவசதிகள்

## மாவட்ட நிர்வாகஸ்தர் தெரிவிக்கும் குறைகள்

வத்துகாமம், திங்கள்

"அநேகமான கம்பெனி தோட்டங்களிலும் கம்பெனி சம்பந்தப்படாத தோட்டங்களிலும் வசிக்கும் தொழிலாளர்களுக்கும், குழந்தைகளுக்கும் சரியான வைத்திய வசதி கிடைப்பதில்லை. இதனல் அநேக தொழிலாளர்களும் பிள்ளைகளும் பலவித நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்" என்று வத்துகாமத்தில் நடைபெற்ற தோட்டத்தலைவர்கள் கூட்டத்தில் பேசும் போது லங்கா தோட்டத்தொழிலாளர் யூனியன் மாவட்ட நிர்வாகஸ்தர் திரு ஏ. வி. சுப்ரமணியம் கூறினர்.

"நான்கு ஐந்து தோட்டங்களுக்கு ஒரு டிஸ்பென்ஸரியும் அதற்கு ஒரு டிஸ்பென்ஸரும் நியமிக்கப் பட்டிருக்கின்றனர். சில தோட்டங்களுக்கு தகுதி வாய்ந்த டிஸ்பென்ஸர்கள் நியமிக்கப்படுவதில்லை. இந்த நான்கு ஐந்து தோட்டங்களிலும் சுமார் 2000 தொழிலாளர்கள் உள்ளனர்.

இவ்வித டிஸ்பென்ஸரிகளில் நோய்க்கேற்ற மருந்துகள் கிடைப்பதில்லை. மேலும் நோய்ப்பட்டு 2, 3 நாட்களின் பின்னரேதான் சிகிச்சை பெறப்படுகிறது.

இதுதவிர தோட்டப்பகுதிக் குழந்தைகளுக்கு போஷாக்கு குறைவேற்படுவதற்கும், தோட்டப் பகுதிகளில் நோய் அதிகரிப்பதற்கும் காரணம் சுகாதாரக் குறைவேயாகும். முற்காலத்தில் கட்டிய பழைய 'லயன்'களில் 10, 12 அடி விஸ்தீரணமுள்ள அறையில் 7, 8 பேர் வசிக்கிறார்கள். சுத்தமான குழாய்த்தண்ணீர் வசதி, மலசலகூட வசதி கிடையாது. போஷாக்கு உடைய உணவுப் பொருட்களை விநியோகிக்கும் வழிவகை கிடையாது. இந்த 20-ம் நூற்ருண்டிலும் இவ்வித இழி நிலை தொடர்ந்து நடைபெறுவது கண்டு வருந்த வேண்டியிருக்கிறது.

இது பற்றி பல சங்கங்களிலிருந்தும் பலத்த புகார்கள் பல வருடங்களாக செய்யப்பட்டு இருந்தபோதிலும், தோட்ட முதலாளிகள் செவி சாய்த்து சிறிதளவாவது, கவனிக்கவில்லை. எனவே பொது மக்களின் நலனைக்கவனிக்குமிடத்து தகுதியான வைத்திய வசதிகளை சுகாதார அதிகாரிகளின் மூலம் தோட்டங்களை மேற்பார்வையிட்டு சுகாதார வசதிக்கேற்ற அமைப்பு விதிகளையும் குழந்தைகளின் வளர்ப்புக்கேற்ற விடுதிகளையும் தாதிமார்களையும் சரியான முறையில் நியமிக்கச்செய்தல் அவசியம்" என்றும் அவர் கூறினர்.

மற்றும் திரு. புஷ்பராஜன், மாவட்டப்பிரதிநிதி திரு. ஆர். ஏ. சோதிவேல்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

**திங்கள் 29-11-61**

(செய்திகள் காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினட்டும் வீணையும்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 செல்லமணி செல்லையா-வயலின், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தேர்ந்த இசை, 9-30 எஸ். பூபாலபிள்ளை—பேச்சு, 9-45 பரஞ்சோதியம்மா இராஜமாணிக்கம்—பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 டி. ஆர். வரதாச்சாரி—வீணை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வாத்திய இசை, 1-50 மெல்லிசை 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவித பாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப்பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 நூல் மதிப்புரை, 7-45 இசைக்கோவை, 8-00 டி. ஆர். வரதாச்சாரி—வீணை, 9-30 திரைப்பட இசை, 9-15 நல்லுரை, 9-30 'விபத்தின் விளைவு'—நாடகம்.

## பண்டத்தரிப்பு வெற்றி

மாவிட்டபுரம், திங்கள்

பண்டத்தரிப்பு விளையாட்டுக் கழகத்திற்கும் காங்கேசன்துறை செட்ன்றல்விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் பண்டத்தரிப்பு விளையாட்டுக்கழகம் 4—1 கோல்களால் வெற்றியீட்டியது.

திரு. கே. தனபாலசிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## "முதலில் உள் நாட்டாரை சேவையில் அமர்த்துக"

கொழும்பு, திங்கள்

அரசாங்க கைத்தொழில் கார்ப்பரேஷன்கள், ஆலோசகர்களைத் திரட்டும்விஷயத்தில் உள்நாட்டவர்களின் சேவையையே முதலில் நாடவேண்டுமென்றும், தகுதியானவர்கள் கிடைக்காவிட்டால்தான்வெளிநாட்டு நிபுணர்களின் சேவையைக் கோரவேண்டுமென்றும் கைத்தொழில் மந்திரி விதித்திருக்கிறர்.

## சாவகச்சேரிப் பகுதியில் களவுகள்

சாவகச்சேரி, திங்கள்

சாவகச்சேரி பொலிஸ் பகுதியில் இடத்துக்கிடம் கொள்ளைக்கோஷ்டியினர் தலைகாட்டி ஒரு நாளில் எட்டுப் பத்து வீடுகளில் அகப்பட்டவற்றைக் கொள்ளையடித்துச் சென்று விடுகின்றனர் என அறிவிக்கப்படுகிறது.

சென்ற இரவு ஒரு வீட்டில் 5000 ருபாவிற்கு மேல் களவு போய்விட்டதாகவும் இன்னெரு வீட்டில் கோழிகள் களவு போனதாகவும் அறியப்படுகிறது.

## போர்த்துக்கல் தாக்குதல்பற்றி நேரு

புதுடில்லி, நவ. 27

இந்தியப் படகுகளை போர்த்துக்கல் தாக்கியதுபற்றி பிரதமர் நேரு குறிப்பிடுகையில், மேலும் இவ்விதச் செயல்கள் நடைபெருமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகக் கூறினர். தொடர்ந்து இது நீடித்தால் வேறு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் அவர் கூறினர்.

## பரிசளிப்பு ஒத்திவைக்கப்பட்டது

யாழ்ப்பாணம், திங்கள்

கடந்த சனிக்கிழமை பாடசாலைகள் 'ஏ' பிரிவைச்சேர்ந்த இரண்டுதெரிவுக்கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்றிருக்க வேண்டிய விசேஷ உதைபந்தாட்டமும், இவ்வருட உதைபந்தாட்ட சம்பியன்ஸுக்கான பரிசளிப்பு விழாவும் மழை காரணமாக ஒத்திவைக்கப்பட்டன.

## மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

சிங்கப்பூர், நவ. 27

பாடத்திட்டங்களில் மாறுதல் செய்யப்பட்டிருப்பதை ஆட்சேபித்து சீன மாணவர்கள் இங்கு ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

# தேச செல்வத்தை முடக்கியுள்ள ஏகபோகஸ்தர்கள்

## மகலனேபிஸ் கமிட்டி கண்டுபிடிப்பு

புதுடில்லி, நவ. 27

சில ஏகபோகமான ஏஜன்ஸிகள் தேச செல்வத்தைத் திரட்டி முடக்கி வைத்திருப்பது சம்பந்தமாக, சில ருசிகரமான தகவல்களை ஸ்ரீ பி. சி. மகலனேபிஸ் தலைமையிலுள்ள செல்வ நிலைமைகளைப் பற்றி ஆராய்ந்து வரும் கமிட்டி கண்டுபிடித்திருக்கிறது.

தேசத்தின பெரிய தொழில் கூட்டுகள், தொழில் கம்பெனிகள் ஆகியவற்றின் பங்குகளில் 40 சத விகிதத்தை, வருமானவரி கொடுப்பவர்களில் 2 சத விகிதம் பேர் மட்டும் தங்களுக்குள்ளாகவே வைத்துக் கொண்டிருக்கின்றனர் என்று தங்களுடைய விசாரணையின் போது திரட்டப்பட்டிருக்கும் புள்ளி விவரங்களிலிருந்து திட்டமாகத் தெரிய வருவதாய் கமிட்டியினர் கூறுகின்றனர்.

இந்த 2 சத விகிதம் பேரும் குடும்பங்கள் மாதிரியுள்ள 18 குடும்பக்கம்பெனிகளில் உள்ளவர்கள்.

தேசத்தின் மொத்த ஜனத்தொகையில் 100-க்கு ஒருவர் தான் வருமானவரி செலுத்துகிறர்கள். இந்த சொற்ப மைனரிட்டி வசம் தனியார் தொழில் துறை செல்வத்தில் 78 சத விகிதம் அடங்கியிருக்கிறது. இவர்களிடையே 18 குடும்பக் கம்பெனியின் கைக்குள் மொத்த தனியார் துறைச் செல்வத்தில் 58 சத விகிதம் அடங்கியுள்ளது.

ஹைதராபாத்நிஜாம், ராஜஸ்தான், சௌராஷ்டிரா, ஒரிஸ்ஸா சுதேச ராஜாக்கள் ஆகியோரிடம் தனியார் துறைச் செல்வத்தில் சுமார் 29 சதவிகிதம் இருக்கிறது.

கமிட்டி இப்போது 4 தடவை தான் கூடி பூர்வாங்க விசாரணைகளை நடத்தியிருக்கிறது.

இதுவரை கிடைத்துள்ள விவரங்களை வைத்துக் கொண்டு விசாரணை நடத்தும்.

ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளுடன் சம்பந்தப்பட்டிருக்கும் கம்பெனிகள்தான் இக்கமிட்டியின் வேலைக்குக் குந்தகம் விளைவித்து வருகின்றன. ஸ்டாக் எக்ஸ்சேஞ்சுகளின் மூலமே கமிட்டி தனக்கு வேண்டிய விவரங்களைச் சரியானபடி திரட்ட முடியும். ஆகையால் சம்பந்தப்பட்ட கம்பெனிகள் ஒத்துழைக்க மறுப்பது பெரும் இடையூருக இருப்பதாய் கமிட்டி கருகிறது.

# கல்வித்துறையில் ரஷ்யா காணத முன்னேற்றம்

## தமிழ்நாட்டு நிலைமைபற்றி திரு. சுந்தரவடிவேலு

மதுரை, நவ. 27

ரஷ்யாவினுல் கல்வித்துறையில் சென்ற 40 ஆண்டுகளில் காண முடியாத அளவு முன்னேற்றத்தை தமிழ்நாடு சென்ற 14 ஆண்டுகளில் அடைந்து விட்டது என்று தமிழ்நாடு கல்வி இலாகா டைரக்டர் ஸ்ரீ என். டி. சுந்தரவடிவேலு கூறினர்.

கல்வி அதிகாரி சுந்தரவடிவேலு கூறியதாவது:-

"சுமார் 7 ஆண்டுகளுக்கு முன் 1954ல், தமிழ்நாடு முதன் மந்திரி ஸ்ரீ காமராஜ் என்னை அழைத்து, பள்ளிகளில் 10வது வரை இலவசப் படிப்பு வசதி அளிப்பதைப் பற்றி என்னுடன்விவாதித்தார். அப்போதே குழந்தைகளுக்கு இலவசக் கல்வி அளிகக வேண்டிய அவசியத்தை உணர்ந்து அவர் திட்டம் போட ஆரம்பித்துவிட்டார்.

சமீபத்தில் நான் ரஷ்யாவுக்குச் சென்றிருந்த போது அங்கே இப்போதுதான் 10வது வரை இலவசக் கல்வியளிப்பதற்கான முயற்சிகள் நடந்து கொண்டிருப்பதைக் கண்டேன். ரஷ்யா 40 வருஷத்துக்குப் பிறகு யோசிக்க முற்பட்டிருக்கும் ஒரு விஷயத்தை ஸ்ரீ காமராஜ் இந்தியா சுதந்திரமடைந்த சொற்ப வருஷங்களுக்குள்ளாகவே திட்டமிட்டு நிறைவேற்றியும் வருவதை இன்று நாம் பார்க்கிறேம். இன்னும் பத்தாண்டுகளில் ரஷ்யா 50 வருஷத்தில் சாதிக்காத பல விஷயங்களை நாம் நமது நாட்டில் சாதித்து விடுவோம் என்பது நிச்சயம்.

மாணவர்களும் தமக்கு வழங்கப்படும் வசதிகளை நன்கு பயன்படுத்திக் கொண்டால், நமது நாடு வியக்கத்தக்க அளவில் முன்னேறிவிடும். நெறி தவறிய செய்கைகளில் மாணவர்கள் ஈடுபடக்கூடாது. கல்வி எனும் மின்சாரத்தை ஒழுக்கம், கட்டுப்பாடு என்ற கம்பிகளின் மூலம் கட்டுப்படுத்தி சரியான வழிகளில் பயிற்சி பெறவேண்டும். கம்பிகளில் கட்டுப்பாடு செய்யாமற் போனல் மின்சார சக்தியால் நாசமே விளையும். தற்போது சமுதாயத்தில் சில தீய சக்திகள் புகுந்துள்ளன. இவற்றை ஒழித்துக்கட்ட வேண்டும்.

வரி மூலம் மக்களிடமிருந்து திரட்டும் பணத்தைக் கொண்டுதான் சர்க்கார் பிரதி மாணவனுக்கும் ரூ. 150 முதல் 200 வரை செலவழிக்கிறது".

## இலங்கையர்கோன் மறைவுக்கு அனுதாபம்

தெல்லிப்பழை, திங்கள்

"நாட்டின் உயர்வு, கலைஞர்களின் கையில் தங்கியுள்ளது என்று கூறின் அது மிகையாகது. கலைஞர்களின் வாழ்வு மலர்ந்தால் தான் கலை செழிப்புறும் என்று உணர்ந்து இசைக் கலைஞர்களின் நல்வாழ்க்கைக்கு அருந்தொண்டாற்றிய இலங்கையர்கோனின் பிரிவு இசையாளர் சமூகத்தின் உள்ளப்பிரிவாகும்."

யாழ்ப்பாணம் இசையாளர் சங்கத்தின் காரியதரிசி திரு. எஸ். ஆர். ஞானசுந்தரம் இலங்கையர்கோனின் மறைவுக்குஅனுதாபம் தெரிவித்து அனுப்பியுள்ளசெய்தியில்மேற்கண்டவாறு கூறியுள்ளார். இலங்கையர்கோனை இசையாளர் சமூகம் மறந்துவிட முடியாது. இசையாளரின் நலனுக்காக இசையாளர் சங்கத்தின் தலைவராகஇருந்து அவர் ஆற்றிய பணிகள் அளப்பில. இசையாளர் சமூகம் இன்று ஒற்றுமையுடன் திகழ்வதற்குக் காரணம் இலங்கையர் கோனின் தொண்டுகளாகும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## 435 விவசாய பண்ணைகள்

கொழும்பு, திங்கள்

எல்லாத் தொகுதிகளிலும் 435 விவசாயப்பண்ணைகளை அமைப்பதென காணி விவசாய மந்திரி திரு. ஸி. பி. டி' சில்வா முடிவுசெய்திருக்கிறர். இப்பண்ணைகளில் உப உணவுப் பொருட்கள் பயிரிடப்படும்.

## தமிழ்நாட்டில் இரும்பு தொழிற்சாலை

சென்னை, நவ. 27

தமிழ்நாட்டில் இரும்புத் தொழிற்சாலை ஒன்றை அமைக்க முடிவு செய்யப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற

குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:

குனேகா அடையார், மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:

ஜெகஜோதி அன் கோ,

குருதெனியா.

கொழும்பு ஸ்டாக்கிஸ்ட்:

செல்வாஸ் (SELVAS)

(பிரபல ஜவுளித் தினிசு விற்பனையாளர்கள்)

31, செட்டியார் தெரு, கொழும்பு.

மணி வாக்கு
உயர்ந்த உண்மை மலர்
வது ஆழ்ந்த அன்பினலேயே.

# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு
கார்த்திகை மீ14 உ (29-11-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone: 389.

# நற்றமிழ் நாவலர்
# இன்று 82-ஆம் குருபூசை

**சிதம்பரத்தில் ஆறுமுக நாவலர் பெருமானின் பெயரால் விளங்கும் அறநிலையத்தின் நற்பொறுப்பாளர் திரு. தி. க. இராசேசுவரன் நாவலர் பெருமானின் நற்றொண்டுகளை இங்கு சுருக்கமாகத் தந்துள்ளார்.**

ஞாயிறு தன் ஒளியால் உலகத்திருளை நீக்கி உயிரினங்களைச் செழிப்பாக வளர்ப்பது போல நாவலர் பெருமான் தமது அறிவொளியால் புறச்சமயவிருளைப் போக்கித் தமிழ்ப்பற்று வளரச் செய்த மேதகையார் என்பது மிகையாகாது. இக்காரணம் பற்றியே அவர் பரசமயகோளரி என்றும் நற்றமிழ் நாவலர் என்றும் அழைக்கப்பட்டனர்.

இன்று நாம் குருவாகக் கொண்டாடிப் பாராட்டும் ஆறுமுகநாவலர் பெருந்தகையாரைப் பற்றித் தமிழிலும் வடமொழியிலும் வல்லுநரான காலஞ்சென்ற பேரறிஞர் சுன்னாகம் குமாரசுவாமிப்புலவரவர்கள் தாம் எழுதி வெளியிட்ட 'தமிழ்ப் புலவர் சரித்திரம்' என்னும் நூலில் வீதந்து கூறுவதாவது:

"இவருடைய இலக்கியப் பயிர்சி வன்மையை இவரால் அச்சிடப்பட்ட பரிமேலழகருரை, திருக்கோவையுரை, பாரதம், சேதுபுராணம், கந்தபுராணம் முதலிய இலக்கியங்கள் காட்டும். இலக்கணப் பயிற்சி வன்மையை இலக்கணச் சுருக்கம், நன்னூற் காண்டிகை, சேனாவரையம், பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து முதலிய இலக்கணங்கள் காட்டும். நீதிநூல் நியாய நூல்களின் வன்மையையுஞ் சைவசித்தாந்த சரித்திர வன்மையையும் பெரிய புராண சூசனம் காட்டும். தருக்க சங்கிரகம், சைவசமயநெறியுரை முதலியனவுங் காட்டும். பரிசோதனவன்மையை அச்சிட்ட நூல்கள் எல்லாம் காட்டும் செந்தமிழ் வாக்கியத் தொடை வன்மையைத் திருவிளையாடற் புராண வசனம் பெரிய புராண வசனம் முதலியன காட்டும். கண்டன வன்மையைச் சண்டமாருதம் போற் சென்று தாக்கித் தலைகுனிக்கும் சுப்பிரபோதம், போலியருட்பா மறுப்பு, மித்தியாவாத நிரசனம் முதலியன காட்டும். செய்யுளியற்றும் வன்மையை அராலிச் சித்திவிநாயகர் விருத்தம் முதலியன காட்டும்.

வித்தியாதானப் பெருந்தருமச் செயலை இவராலே தாபிக்கப்பட்டு நடந்துவரும் வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையும், சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலையும் பிறவுங்காட்டும்."

சென்னை அரசியலாரின் ஆதரவோடு வெளிவரும் கலைக் களஞ்சியம் தொடரில் முதலாம் களஞ்சியத்தில் இவரைப்பற்றிக் காணப்படுவதில் முக்கியபகுதியாவது:

"பர்சிவல் பாதிரியார் இவருக்கு 19-ம் வயதிலேயே இருமொழித் திறமை இருப்பதைக் கண்டு, தமது பாடசாலையில் தமிழ், ஆங்கில உபாத்தியாராகவும், தமக்குத் தமிழ்ப் பண்டிதராகவும் அமர்த்திக் கொண்டு, பைபிளைத் தூய தமிழில் மொழி பெயர்க்கச் செய்தார். நாவலர் பைபிளை மொழி பெயர்த்து வருகிற காலத்திலே தமது சமயத்தை உணர வேண்டும் என்ற உணர்ச்சி தோன்றச் சைவசித்தாந்த சாஸ்திரங்களையும், திருமுறைகளையும், சமஸ்கிருதத்தையும் கற்றுச் சைவாகமங்களிலே வேண்டிய பகுதிகளையுந் தாமே கற்றுக் கொண்டார். இளமை தொட்டே கோயில்களிற் புராணங்களுக்குப் பதப்பொருள் கூறி விருத்தியுரை சொல்லுதல், தருக்கித்தல் முதலிய பழக்கங்களும் இவரிடம் இருந்துவந்தன. சைவானுஷ்டானங்களில் என்றுமே இவர் தவறியதில்லை.

அக்காலத்தில் பாதிரிமார் மதமாற்றத்திற்குக் கையாண்ட முறைகளால் நாவலருக்கு வருத்தம் உண்டாயிற்று. அவருடைய வாழ்க்கையே மாறியது. அவர் இல்வாழ்க்கையிற் புகாமல் சமய வளர்ச்சிக்கே உழைக்க வேண்டும் என உறுதி செய்து கொண்டார். 24-ம் வயதின் தொடக்கத்தில் மாணவர் சிலரைச் சேர்த்துச் சம்பளம் பெறுமல் இராக்காலங்களில் சமய நூல்களையும், கருவி நூல்களையும் படிப்பிக்கத் தொடங்கினர். 25-ம் வயதில் வெள்ளிக்கிழமை தோறும் பெருந் திரளானவர்களுக்குச் சமயச் சொற்பொழிவு செய்து வந்தார். பின்னர் தமது உத்தியோகத்தை விடுத்து 26-ம் வயதில் யாழ்ப்பாண நகரத்தில் சைவப்பிரகாச வித்தியாசாலையைத் தாபித்தார். இவருடைய மாணவர்களே ஆசிரியர்கள் ஆனர்கள். மருகரும் மாணவருமான வித்துவசிரோமணி ச. பொன்னம்பலபிள்ளை பாடஞ் சொல்லுவதிலேயே காலங் கழித்தார். சபாபதி நாவலரும் இவருடைய மாணவர்களித் சிறந்தவர் தமிழ்நாடு முழுவதிலும் சிதம்பரம் முதலிய முக்கியத் தலங்கள் தோறும் சைவவித்தியாசாலைகள் அமைக்க வேண்டும், சைவப்பிரசாரகர்களை உண்டாக்க வேண்டும் என்கின்ற ஊக்கம் நாவலருக்கு வரவரக் கிளர்ந்தது. நாவலர் என்ற பட்டம் 27-ம் வயதில் திருவாவடுதுறை ஆதீனத்தால் வழங்கப்பட்டது. இராமநாதபுர சமஸ்தானம் நாவலர் முயற்சிகளுக்கு வலிந்து உதவ முன் வந்தது.

சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் உபயோகமான கருவி நூல் சமயநூல்களின் இன்றியமையாமையை உணர்ந்து புதியனவாக நூல்கள் எழுதவும், ஏட்டிலிருந்தவை ஆய்ந்து அச்சிடவும் இவருக்குப் பணி ஏற்பட்டது. நாவலருடைய எழுத்துக்களும், பேச்சுக்களும், பதிப்புக்களும் சூழ்நிலையின் படிப்படியான வளர்ச்சியைக் குறுக்கோளாகக் கொண்டவை. அக்காரணத்தால் இவர் முயற்சிகளெல்லாம் சிறந்த அடி நிலையிலிருந்து தொடங்கி நடந்தவைகள் எனலாம்."

ஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானைப்பற்றித் தவருக வழங்கும் சில கதைகள் உண்டு. அவைகளில் ஒன்று, அருட்பா என்னும் பெயர் பற்றி அவர் வழக்குத் தொடுத்தார் என்பது அதுபற்றி வாரவெளியீடு ஒன்றில் மூன்று மாதங்களுக்கு முன் காணப்பட்டதால் இங்கே குறிப்பிடவேண்டியது அவசியமாயிற்று. நாவலர்பெருந்தகையார் அருட்பா பெயர் பற்றி வழக்குத் தொடுக்கவும் இல்லை. அவருக்கு மாருகத் தீர்ப்புக்கொடுக்கவும்படவில்லை; தம்மை அவதூருகப் பேசினதாக வழக்குத்தொடுத்தார்; பிரதிவாதிப் பெரியார் அவ்வாறு அவதூருகப் பேசவில்லை என்று நீதிமன்றத்தில் உறுதி கூறினமையால் தாமாகவே வழக்கைவிலக்கிக்கொண்டார். அவர் காலத்தில் நடந்தது இதுவே. இது பற்றிப் புலன்விசாரித்தபொழுது சில விவரங்கள் தெரியவந்தன. ஸ்ரீ ஆறுமுகநாவலர் காலத்திற்குப் பின் "1904 வருஷத்திய 24533 காலண்டர் நம்பரில் சென்னை பிரசிடென்சி மாஜிஸ்திரேட் கோர்ட்டில் நா. கதிரைவேற்பிள்ளை, க. பாலசுந்தர நாயக்கர் இருவர் பெயரில்" 'மருட்பா மறுப்பு, வழக்கு வடிவேற்பிள்ளை என்பவராற் தொடுக்கப்பட்டதெனவும் பிரதிவாதிகள், இருவரையும் "1904-ம் வருஷம் நவம்பர் மாதம் 21-ம் திகதி" விடுதலை செய்தனரெனவும் "இதன் பேரில் ஹைகோர்ட்டுக்கு High Court Calendar 1905 வருஷத்திய இல. 143 அப்பீல் மனு தாக்கல்" செய்யப்பட்டதெனவும் "1905 வருஷம் நவம்பர் மாதம் 21ஆம் தேதி ஹைகோர்ட்டு ஜஸ்டிஸ் மூர் துரை, ஜஸ்டிஸ் பென்ஷன் துரை தீர்ப்பினல்" அப்பீல் தள்ளப்பட்டதெனவும் தெரியவருகிறது.

## புத்தக வெளியீட்டு கருத்தரங்கம்

'எந்தச் சந்தர்ப்பத்திலும் உதவியாகவும், எப்பொழுதும் இன்பந்தருவதாகவும், இன்னல்களுக்கெல்லாம் ஒரு கேடயமாகவும் உள்ள ஒரு சுவையை வேண்டிப் பிரார்த்திப்பதானல் நூல்களைப் படிக்கும் சுவையையே வேண்டுவேன்' என்று அறிஞர் ஒருவர் தமது நூல் ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்ருர்.

நூல்களைப் படித்து இன்புறுவதற்கும் அவற்றை அனுபவிப்பதற்கும் வேண்டிய சகல சாதனங்களும் கிடைத்துவிட்டால் அந்த ஆனந்தத்துக்கு ஒரு நாளும் குறைவு ஏற்படமாட்டாது.

மக்களுக்கு வேண்டிய நூல்களை நல்ல முறையில் வெளியிடுவது இலகுவான காரியமன்று. இந்தப் பணியைச் செவ்வனே செய்வதற்காக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் பெரிதும் முயன்று வருகின்றது. இதன் கலாச்சாரக் கழகம் இத்துறையில் ஏற்படுத்திவரும் புத்தகப் பிரசுரக் கருத்தரங்கம் கொழும்பில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பர்மா, பாரசீகம், பிலிப்பைன்ஸ், ஈரான் ஆகிய நாடுகளிலிருந்து புத்தகப் பிரசுரத்தில் ஈடுபட்டு உழைத்துவரும் பிரதிநிதிகளும், புத்தகங்கள் வெளியிடுவதில் ஆலோசனை கூறுவோரும் இக்கருத்தரங்கத்திற் பங்கு பற்றித் தங்கள் யோசனைகளைக் கூறிவருகின்றனர்.

இலங்கை போன்ற நாடுகளில் புத்தக வெளியீடு உன்னத நிலையை இன்னும் அடையவில்லை. பாடப் புத்தகங்களை வெளியிடுவதில் அநேக பதிப்பகங்கள் ஊக்கங் காட்டிவருகின்றவேயன்றி பொது மக்களுக்கு, சிறப்பாகக் குழந்தைகளுக்கு உகந்த நூல்களை வெளியிடுவதில் இங்குள்ள பதிப்பகங்கள் அக்கறையுடன் உழைப்பதில்லை என்றே கூற வேண்டும். இத்துறையில் இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையடைந்துள்ளது. அங்கு பதிப்பகங்கள் நல்ல நூல்களை பல்வேறு மொழிகளிலும் வெளியிட்டு வருகின்றன. நூலாசிரியர்களுக்குப் போதிய அளவு சன்மானம் கிடையாதிருந்தாலும் அவர்களுடைய நூல்கள் அழகாக வெளியிடப்படுகின்றன. கேரளத்தில் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம் ஒன்று கூட்டுறவு முறையில் நூல்களை மலிவாக வெளியிட்டு வருகின்றது. சமீபத்தில் சென்னை எழுத்தாளர்களும் புத்தகப் பிரசுர கழகம் ஒன்றினை ஏற்படுத்தியிருக்கின்றனர். தென்னிந்திய புத்தக ட்ரஸ்ட் அருமையான சில நூல்களைத் தமிழில் கவர்ச்சிகரமாகவும் மலிவாகவும் வெளியிட்டு வருகின்றது. இக்கழகத்தின் ஆலோசகராகவிருந்து குழந்தைகளுக்கான நல்ல நூல்களை வெளியிட்டுவரும் திரு. அழ. வள்ளியப்பா இந்தியாவின் பிரதிநிதியாக இக்கருத்தரங்கத்திற் பங்கு பற்றுகின்றார்.

மக்களின் தேவைகளுக்கேற்ப ஒரு திட்டத்தை வகுத்து நூல்களை வெளியிடுவதே உபயோகமாகவிருக்கும். மேனாடுகளில் பாடப் புத்தகங்களாயினும் சரி ஏனைய நூல்களாயினும் சரி, அவை மிகுந்த ஆராய்வுடனேயே வெளியிடப்படுகின்றன. அனுபவம் வாய்ந்த அறிஞர்களின் யோசனைகளைப் பெற்று அங்குள்ள பதிப்பகங்கள் தங்கள் பணியைச் செவ்வனே நிறைவேற்றி வருகின்றன.

இலங்கையில் புத்தகங்களை வெளியிடுவதென்ருல் கைப் பணத்தை இழக்கும் கதையாகவே முடியும். இதனல் இங்குள்ள எழுத்தாளர்கள் தங்கள் நூல்களை வெளியிட முடியாது தவிக்கின்றனர். ஒரு சில எழுத்தாளர்கள் பெரு முயற்சி செய்து இந்நாட்களில் தங்கள் நூல்களை வெளியிட்டு வருவது உண்மையாகவே வரவேற்கத்தக்க பணியாகும். இவர்களுக்கு அரசாங்கத்தின் பண உதவி தாராளமாகக் கிடைக்குமாயின் எத்தனையோ நல்ல நூல்களை வெளியிடுவது சாத்தியமாகும்.

உள்நாட்டுக் கைத்தொழில், கலாச்சார அமைச்சர் கொழும்பில் ஆரம்பித்து வைத்துள்ள நான்காவது புத்தகப் பிரசுரக் கரத்தரங்கம் எழுத்தாளர்களின் நூல்களைப் பிரசுரிப்பதற்கு எவ்வகையில் உதவி செய்யலாம் என்பதைப்பற்றியும் ஆராயுமென நம்புகின்ளேம். பிறநாட்டு நல்லறிஞர்களின் நூல்களை மொழி பெயர்ப்பதும் உலக ஒருமைப்பாட்டுக்கு உதவிசெய்வதாகும். அத்துடன் நாட்டின் செல்வமாகிய குழந்தைகளுக்கான நூல்களை வெளியிடுவதிலும் இக்கருத்தரங்கம் கவனம் செலுத்துமென எதிர்பார்க்கின்ளேம். இவற்றைக் கருத்திற்கொண்டு கருத்தரங்கம் நல்ல முடிவுகளைச் செய்யுமானல் அதன் பணிகள் எதிர்காலத்திற் சிறப்புறும் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

## மோட்டார் வான் சேவை
### மந்திரியின் புதிய திட்டம்

கொழும்பு, நவ. 28

பிரயாணிகளை ஏற்றிச் செல்லும் தனிப்பட்ட மோட்டார் வான்களுக்கென தனியாக சபையை நிறுவுவதற்கான ஒழுங்குகளை தொழில் தேசிய மய சேவைகள் அமைச்சர் திரு. எம். பி. டி. ஸொட். சிறிவர்த்தன செய்து வருகிருர்.

இச் சபை அடுத்தவருட ஆரம்பத்தில் அமைக்கப்படும்.

பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்ட சகல தனியார் மோட்டார் 'வான்'களும் இச் சபையினல் பதிவு செய்யப்படும். மோட்டார் வான் சேவையினல் கிடைக்கும் லாபம் 'வான்' சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்படுமாம்.

புதிய திட்டத்தின்படி இ. போ. சபைக்கு எவ்வித நஷ்டமுமில்லாமல் இந்த வான் சேவை நடைபெறமுடியுமெனக் கருதப்படுகிறது. பஸ்கள் பிரயாணம் செய்யமுடியாத பகுதிகளில் இந்த 'வான்' சேவை செய்வதற்கு இத்திட்டம் வசதியளிக்கிறது.

## ஐயாறன் எழுதுவது

காலையிலே ஓர் அன்பர், நல்ல இளநீர் இருக்கிறது, உனக்காகவே வைத்திருக்கிறேன். சாப்பிடுகிருயா?, என்று கேட்டார். இளநீர் என்ருல் எனக்கு உயிர். சாப்பிட்டேன். கற்கண்டுதான்!

தேவாமிர்தம் போன்ற இப் பானத்தை இயற்கை அன்னை எவ்வளவு பக்குவமாக, எவ்வளவு பத்திரமாக நமக்காகத் தயாரித்து வைத்திருக்கிருள்! இதை நினைக்கும்போது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது! தேகத்துக்கும் இது எவ்வளவு குளிர்ச்சி!

இவ்வளவு அருமையான பானத்தை இயற்கை அன்னை நமக்கு இங்கு ஏராளமாகக் கொடுத்திருக்கையில் அதைவிட்டுவிட்டு, வேறு என்னென்னவோ குடிக்கிறேம். காசைக் கொடுத்து தேளைக் கொட்டிக்கொள்ளுகிறேம்.

தென்னந்தோப்பு அதிகமுள்ள இடங்களிலும் கிராமக் கடைகளிலும் ஓரஞ்சு பார்லி, சோடாபுட்டி மயம் தான். இளநீர் விற்பதில்லை; என் இப்படி?

எலிஸபெத் மகாராணி இங்கு விஜயம் செய்தபோது இளநீரை மிகப் பிரியமாகப் பருகி பாராட்டினர். ஆனல் இங்கு ஓரஞ்சபார்லி நாகரிகம் தான் பரவியுள்ளது. வேறு சீமைச் சரக்கு, நாட்டு சரக்கைப்பற்றி நான் ஒன்றும் சொல்லத் தேவையில்லை.

* * *

தியாகராஜ ஸ்வாமி, ஒரு பிரபல கீர்த்தனையில் "சக்கனி ராஜமார்க்கமு உண்டக, சந்துல தூரனேல ஓமனஸா' என்று பாடினர். "நல்ல ராஜமார்க்கம் இருக்கையில் சந்துக்குள்ளே ஏன் நுழைகிருய் ஓ மனதே" என்று தம் மனதைக் கேட்கின்ருர். அதே கீர்த்தனையில் அனுபல்லவியிலே, "சிக்கன பாலுமீகட உண்டக, சில்லனி கங்கா ஜலமேல" என்று இடித்துக் கூறுகிருர். அதாவது "ஆடையுடன் கூடிய நல்ல காய்ச்சின பால் இருக்கையில், சில்லென்ற ஆற்று நீரைப் பருகுவானேன்?"

இதே கேள்வியை நாமும் நம் மனதைக் கேட்கவேண்டும். அருமையான இளநீரும், பாலும் மோரும் இயற்கை அன்னை தருகையில், ஏன் வேறு எதையெதையோ நாடி உடலையும் உள்ளத்தையும் கெடுத்துக்கொள்ள வேண்டும்?

ஆனல் காப்பியை விடவேண்டுமென்று எவ்வளவோ முறை முயன்றும், அது வெகுகாலம் முடியவில்லை. ஒரு பழக்கம் நமக்கு ஏற்பட்டுவிட்டால், அது நம்மை அடிமைப்படுத்திவிடுகிறது. தன்னை வென்ருலே உலகத்தை வெல்லலாமென்பர் பெரியோர். நமது நாக்கை நாம் முதலில் வென்றுவிட்டோமானல் ஆத்ம விடுதலையும் வெற்றியும் பெரிதும் நெருங்கிவிட்டதென்று கொள்ளலாம். ஆனல் நம் முயற்சியால் இது முடியக்கூடியதா? இல்லை, இல்லை. இறைவனின் துணை இருந்தாலே இது முடிவதாகும். இது ஏதோ சின்ன, அற்ப விஷயமல்ல. மிகப்பெரிய விஷயமாம். அல்லவா?

# 60 கிராமப்புற ஆஸ்பத்திரிகள்

## 8டாக்டர்களே பணியாற்றுகின்றனர்

கொழும்பு, செவ்

60 கிராமப்புற ஆஸ்பத்திரிகளில் எட்டு டாக்டர்கள்தான் பணியாற்றுகிறார்கள். இந்த ஆஸ்பத்திரிகளில் தாதிகள் இல்லை. தாதிகளின் பணியை மருத்துவத் தாதிகளும் கங்காணிகளும் செய்கின்றனர்.

சுகாதார இலாகா நாடுமுழுவதும் நடத்திய பரிசீலனையில் இந்த விபரந் தெரியவந்தது.

120 பிரசவ விடுதிகளுக்கு இரண்டே இரண்டு வைத்திய அதிகாரிகளும் 12 குடிசை ஆஸ்பத்திரிகளுக்கு ஆறு டாக்டர்களுமிருப்பதாக தெரியவந்துள்ளது.

244 மத்திய மருந்துச்சாலைகள் உள்ளன. ஆனல் ஒரேயொரு மருந்துச்சாலைதானொரு டாக்டரின் பொறுப்பில் உள்ளது. மற்றவைகள் யாவும் அப்போதிக்கரிகளின் பொறுப்பிலுள்ளன.

கிராமப்புற ஆஸ்பத்திரிகள், பிரசவ விடுதிகள், குடிசைஆஸ்பத்திரிகள்ஒன்றுக்கேனும்தாதிகள் இல்லை.

சென்ற மாதமுடிவுடன் நாட்டில் 655 ஆஸ்பதிரிகள் உள்ளன. இந்தஆஸ்பத்திரிகளுக்கு 931 டாக்டர்கள்தான் உள்ளனர். 996 அப்போதிக்கரிமார் இவைகளில் பணியாற்றுகின்றனர். 2,344தாதிகளும் 880மருத்துவத் தாதிகளும் 727 மருந்து கலப்பவர்களும் 7,690 கங்காணிகளும் உள்ளனர்

# தெளிவான கொள்கை; சரியான திட்டம் இல்லை

## அரசாங்கத்தின் நிலைபற்றி டாக்டர் என். எம்.

மத்துகம, திங்கள்

"சரியான சோஷலிஸப்பாதையில் அரசாங்கத்தை நடத்துவதற்கு லங்கா சமசமாஜக் கட்சி தெரிவித்த யோசனைகளுக்கு அரசாங்கம் செவிசாய்த்து அதன்படி நடந்திருந்தால் இன்றைய கஷ்டமான நிலையை எதிர்நோக்கவேண்டி நேரிட்டிருக்காது. அரசாங்கத்தின் நடவடிக்கை தொழிலாளரைப் பாதித்துவிட்டதுடன் முதலாளிகளுக்கும் அவர்களது கையாட்களுக்கும் பாதுகாப்பு அளித்துள்ளது"

இவ்வாறு டாக்டர் என். எம். பெரேரா மத்துகமையில் நடைபெற்ற சமசமாஜக் கட்சியின் பிரசாரக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

டாக்டர் பெரேரா மேலும் பேசுகையில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசாங்கம் போட்டதிட்டங்கள் யு. என். பி. யின் திட்டங்களைவிட மோசமானவையென்றார். "அரசாங்கத்தினருக்கு தெளிவான கொள்கை இல்லை. தாங்கள் என்ன செய்கிறார்களென்றே அவர்களுக்குத் தெரியவில்லை. சரியான ஒழுங்கான திட்டமில்லாமல் அரசாங்கம் அபிவிருத்தித்திட்டங்களை ஆரம்பித்துள்ளது" என்று டாக்டர் பெரேரா கூறினார்.

அரசாங்கத்துக்கு நல்ல நோக்கமிருந்தாலும் முற்போக்குத் திட்டங்களை ஆரம்பித்தபோதிலும் திறமையில்லாத காரணத்தினால் அவைகள் பாதியில் நின்றுவிடுவதுடன் மக்களும் அல்லலுக்காளாகின்றனரென்று சமசமாஜக் கட்சித் தலைவர் கூறினார்.

ரஸ்தாப் போக்குவரத்துச் சேவை, துறைமுகம் ஆகியவை தேசீயமயமாக்கப்பட்டதும் கருவாடு வர்த்தகத்தை எடுத்துக் கொண்டதும் நல்ல முற்போக்கான நடவடிக்கைகள். ஆனல் இவைகளின் மோசமான நிர்வாகத்தினால் மக்கள் கஷ்டப்படுகின்றனர் என்று டாக்டர் பெரேரா சொன்னார்.

ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு சுதந்திரக் கட்சிக்கு சமசமாஜக்கட்சி உதவிபுரிந்தது முதலாளித்துவத்தைஒழித்துக் கட்டும்என்ற நோக்கத்துடன் தான் சமசமாஜக்கட்சிஉதவியளித்தது.ஆனல்அரசாங்கத்தின் நடவடிக்கையோ முதலாளிகளுக்குப் பாதுகாப்பளிப்பதுடன் அவர்களுக்கு பலமும் அதிகரிக்கச் செய்கிறது. இதனால்தான் அரசாங்கத்தை நாங்கள் எதிர்க்கிறோம் என்று அவர் சொன்னார்.

இன்றைய நிலையிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்குள்ள ஒரே வழி வங்கிகள், தோட்டங்கள், இன்ஷூரன்ஸ் கம்பனிகள் முதலிய அந்நிய ஸ்தாபனங்களைத் தேசீயமயமாக்கிவிட்டு பெரிய அளவில் கைத்தொழில் விவசாயத் திட்டங்களை ஏற்படுத்துவதுதான் என்று டாக்டர் பெரேரா கூறினார்.

# வெற்றி தோல்வி இல்லை

வவனியா,செவ்வாய்

உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் கீழ் இன்று எட்டாவது நாளாக பலம் பொருந்திய கோஷ்டிகளான வவனியா ஐக்கிய விளையாட்டுக் கழகம் 'ஏ' கோஷ்டிக்கும் வவனியா கிருஷிகப் பாடசாலைக் கோஷ்டிக்குமிடையில் வவனியா முற்றவெளி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் முதல் 30 நிமிஷம் வரை எக்கோஷ்டியாவது கோல் போடவில்லை. அடுத்த 30 நிமிஷ நேரத்தில் இருபகுதியினரும் தலா 2 கோல்கள் போட்டுச் சமமாக்கிக் கொண்டனர். ஆட்டம் முடிய இருந்த இரண்டு நிமிஷங்களுக்கு முன்தான் கிருஷிகப் பாடசாலைக்கோஷ்டி தனது இரண்டாவது கோலைப் போட்டது.

# மேற்பார்வையாளர் இடமாற்றம்

சாவகச்சேரி, செவ்வாய்

சாவகச்சேரி சுகாதார காரியாலயத்துடன் சம்பந்தப்பட்ட தேசிய பால்விநியோக டிவிசனல் மேற்பார்வையாளரான திரு: என். ரி. என். சோமநாதர் கல்முனைப் பகுதிக்கு அடுத்த ஜனவரிமாதம் முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

மன்னார்ப் பகுதியில் கடமையாற்றும் டிவிஷனல் மேற்பார்வையாளர் திரு. ஏ. சம்புலிங்கம் சாவகச்சேரிப் பகுதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# முட்டை உற்பத்தி

## விவசாய இலாகா திட்டம்

கொழும்பு, செவ்வாய்

1965-ம் வருடத்தில் முட்டை உற்பத்தியில் இலங்கை தன்னிறைவு பெறுவதற்கான நடவடிக்கைகளை விவசாய இலாகா மேற்கொண்டுள்ளது. இதன்மூலம் வெளிநாடு செல்லும் பெருந்தொகையான பணத்தை மிச்சப்படுத்தலாமென விவசாய இலாகா கருதுகிறது.

இத்திட்டத்தின்படிநாட்டின் பல பகுதிகளிலும் அரசாங்க ஆதரவில் கோழிப்பண்ணைகள் நிறுவப்படும்.

# விசாவரியை வாபஸ்பெறக் கோரிக்கை

## உடுவில் கி. ச. தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கையிலிருக்கும் வெளிநாட்டு மத குருமாருக்கு இலங்கை அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டிருக்கும் விசாவரியை உடனடியாக வாபஸ் பெறவேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானமொன்று சனிக்கிழமை நடைபெற்ற உடுவில் கிராமசபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது சம்பந்தமான பிரேரணை திரு. ஆசீர்வாதம் ஹென்றியினால் கொண்டுவரப்பட்டு திரு. எஸ். முத்துலிங்கத்தினால்அனுமதிக்கப்பட்டது.

இக் கூட்டம் உப தலைவர் டாக்டர் ஏ. நடராசா தலைமையில் நடைபெற்றது

கதிர்காம மடங்களை அகற்ற வேண்டாமெனவும் ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்படவேண்டுமெனவும் கோரி திரு. தம்பிப்பிள்ளையால் கொண்டுவரப்பட்ட பிரேரணைகளும் அங்கு நிறைவேற்றப்பட்டன.

இத்தீர்மானத்தின் நகல்களை கவர்னர் ஜெனரலுக்கும், பிரதம மந்திக்கும் அனுப்பிவைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

# 'குழப்பம் ஏற்படுத்த முயற்சிசெய்கின்றனர்'

## சில அரசியல் வாதிகள் பற்றி கல்வி மந்திரி

பலாங்கொடை, திங்கள்

"இளைஞர்களுக்குப் பயிற்சியளிப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். இதற்காகவே கல்வி வசதிகளை அரசாங்கம் அளித்துள்ளது. இதன்படி இதுவரைகாலமும் புறக்கணிக்கப்பட்டுவந்த கிராமப்புறப் பையனும் இனி போதியளவு கல்வியறிவுபெற முடியும்" என்று கல்வி மந்திரி அலவி ஹாஜ் பதியுதீன் மாமூத்பலாங்கொடை குமார வித்தியாலயத்தில் கைப்பணிப் பொருட்காட்சியைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினார்.

"காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா சுபீட்சத்துக்கு வழி அமைத்தார். இந்த நாட்டின் பெரும்பான்மையான மக்களின் தாய்மொழியான சிங்களத்துக்கு உரிய இடமளித்தார். கல்விமுறையிலிருந்துதவறினால் தாய்மொழிக்கு உரிய இடம் கிடைக்காமல் போய்விட்டது. இன்று சிங்களத்தின் மூலம் உயர் கல்வி கற்கவும் வசதியிருக்கிறது" என்றுகல்வி மந்திரி சொன்னார்.

"நாட்டில் இன்று குழப்பம் எதுவுமில்லையானாலும் குழப்பத்தை உண்டாக்கி அரசாங்கத்தைமுறியடிக்க சில அரசியல் வாதிகள் முயற்சி செய்கின்றனர். நாட்டுக்குச்செய்யவேண்டிய கடமையைச் செய்வதற்கு மக்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைக்கவேண்டும் என்று கல்விமந்திரி கேட்டுக்கொண்டார்


யாழ்ப்பாணம்

காங்கேசன்துறை வீதியில்

120ஆம் இலக்க கட்டிடத்தில்

நிறுவப்பட்டுள்ள

எலெற்றிக் லைன்ஸ்

(ELECTRIC LINES)

எனும் எங்கள்

புதிய ஸ்தாபனத்தை

திரு. ஜோ. என். ரேச் அவர்கள்

(மனேஜிங் டைரக்டர், மோறிஸ் ரேச் லிமிட், கொழும்பு)

திரு. ஜே. எ. எம். றொம அவர்கள் முன்னிலையில்

(பிலிப்ஸ் ஸ்தாபனத்தின் இலங்கைப் பிரதிநிதி)

1961 நவம்பர் 29ஆம் திகதி புதன்கிழமை காலை

10 மணிக்கு திறந்துவைப்பார்கள்

அத்தருணம் அன்பர்களையும், ஆதரவாளர்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

எலெற்றிக் லைன்ஸ் ஸ்தாபனத்தார்

# சேர். இராமநாதன் நினைவுவிழாவில் தலைவர்கள் புகழ்மாலை

## ஜனப்பிரதிநிதிகள்சபை முன் சிலைக்கு மாலையிட்டு அஞ்சலி

கொழும்பு, திங்கள்

"இராமநாதப் பெருந்தகை சுதந்திரத்துச்கும் ஒற்றுமைக்கும் பரந்த மனப்பான்மைக்குமாக உழைத்த உத்தமர். அவையனைத்தும் தேவையற்றனவாக இக்காலத்தில் இருப்பதையிட்டு வருந்துகின்றேன், இப்பெரியாரை எனது அரசியற் குருவாகப் பெற்றதையிட்டு நான் பெருமையடைகின்றேன்".

இவ்வாறு நேற்று பிரதிநிதிகள் சபைமுன்றிலில் கொழும்பு இந்துவாலிபர் சங்கத்தார் பொன் சேர். இராமநாதன் சிலைக்குமாலைசூட்டி விழாநடாத்திய போது அதில் பங்குகொண்ட பிரபல நியாயவாதி திரு. சி. வி. றணவக்கா குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது :

அவர் இந்துவாக இருந்தாலும் பௌத்தமதச் சீர்திருத்தத்திலும் அக்கறை காட்டினர். அவர் வெளியிட்ட சட்ட அறிக்கைகள் இன்னும் நமக்குப் பயன் படுகின்றன. யாழ்ப்பாணத்திற்குப் புகையிரதப்போக்குவரத்து வசதிகள் செய்தார். இந்நாட்டை கிழக்குலகின் முன்மாதிரியாக ஆக்க அவர் ஆசைப்பட்டார். அந்த நிலை வருமா என்று ஏங்கவேண்டிய இக்காலத்திலும் நம்பிக்கை இழக்காமல் நாம் முன்னேறுவோமாக."

கொழும்பு இந்துவாலிபர் சங்கத்தலைவரும் உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினருமான திரு. மு. சிவசிதம்பரம், திரு. ச. சுப்பையா, திரு. ச. சேதுநாதன் ஆகியோரும் இராமநாதன் சிலைக்கு மாலை சூட்டி அஞ்சலி செலுத்தினர்.

கொச்சிக்கடை பொன்னம்பலவாணேசர் ஆலயத்தில் விசேட ஆராதனையும் கூட்டுப்பிரார்த்தனைகளும் இடம் பெற்றன.

### திருமுறை இசைவிழா

தொடர்ந்து சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் சங்க உபதலைவர் திரு. ச. சுப்பையா தலைமையில் ஆரம்பமாயிற்று. கூட்டத்தில் மக்களிடை திருமுறையைப்பண்ணுடன் ஓதுதற்குஊக்கமளிக்கும்பொருட்டும் அதன் மகிமையை இளைஞர்களிடையே பரப்புவதற்குமாக இவ்வருடம் சிறந்த முறையில் திருமுறை விழா ஒன்றை நடாத்த வேண்டுமெனவும் இளைஞர்கள் மத்தியில் சமய அறிவைப் பெருக்கும் நோக்கமாக சமயநூல்களைப் பரப்பவேண்டுமெனவும் சமயகுரவர்களாகிய நால்வரினது குருபூசைத் தினங்களைக் கொண்டாட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பபட்டது.

---

# பிரிட்டிஷ் குடியேற்றத்தடை மசோதா

லண்டன், நவ. 27

பிரிட்டனில் குடியேற்றத் தடை மசோதா அடுத்த வருடம் முற்பகுதிவரை சட்டமாகாது என பல பிரிட்டிஷ் எம். பி.க்கள் கருதுகிறார்கள். ஆயினும் சாம்ராஜ்ய காடுகளிலிருந்து குடியேறுவதைத் தடுக்கும் விஷயத்தில் பிரிட்டன் தீவிரமாய் இருக்கும் எனக் கருதப்படுகிறது.

# ஆசிரியைக்கு பிரிவுபசாரம்

யாழ்ப்பாணம், திங்கள்

"கல்வியும் கடமையுணர்ச்சியும் உடையவராய் தமது 30 ஆண்டு ஆசிரியப்பதவியில் ஒப்புயர்வற்ற சேவை செய்து வந்த திருமதி சின்னப்பு சுந்தரம் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அதிக ஊக்க காட்டினர். பல மாணக்கர்கள் உயர் நிலையடையத்தக்கதாக அரும்பாடுபட்டுழைத்தார். தமது தன்னலமற்ற சேவையினல் எல்லோரதும் நன்மதிப்பையும் பெற்றுள்ளார். இவரது சேவையின் முன்மாதிரியைப் பின்பற்றினல் நாமும் சிறந்த பணி செய்ய முடியும்."

இவ்வாறு வண்ணை நாவலர் வித்தியாசாலையில் 25 ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றி சமயசம்பந்தமான மாற்றம் பெற்று வேறு பாடசாலைக்குச் சென்ற ஆசிரியை திருமதி சின்னப்பு சுந்தரத்துக்களிப்பட்ட உபசரணை விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய பண்டிதர் இ. திருநாவுக்கரசு கூறினர்.

ஆசிரியர் பலரும் அன்னரது சேவையைப் பாராட்டிப் பேசினர்.

பாடசாலை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் உபசரணைப்பத்திரமொன்று வாசித்தளிக்கப்பட்டது.

தமளிக்கப்பட்ட உபசாரத்துக்கு திருமதி சின்னப்பு சுந்தரம் நன்றி தெரிவித்தார்.

---

# லோகசபா

புதுடில்லி, நவ 27

அடுத்தமாதம் 8-ம் தேதி தற்போதைய லோகசபா கூட்டத் தொடர் முடிவடையும் என சபாநாயகர் அறிவித்தார்.

# காங்கோவிலுள்ள ஐ. நா. பிரதிநிதி

## புதிய உத்தரவுகளை அமுல்நடத்துவார்

நியூயோர்க், நவ. 27

காங்கோவில் ஐ. நா. பிரதிநிதியான திரு. ஓபிரியன் தலைமைக் காரியதரிசி யூதாண்டுடன் ஆலோசனைக்குப் பின் எலிஸபெத்வில்லிக்குப் புறப்பட்டிருக்கிறார். சமீபத்தில் காங்கோ பற்றி ஆலோசிப்பதற்காக திரு. யூதாண்டினல் அவர் அழைக்கப்பட்டிருந்தார். கடாங்காவில் புதிய உத்தரவுகளை அமுல் நடத்துவதில் அவர் பிரதம பாகம் தாங்குவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

### ஐ. நா. சஞ்சிகைகள் கண்காட்சி

கொழும்பு, திங்கள்

ஐ. நா. கல்வி, சமூக, கலாச்சார ஸ்தாபனத்தின் ஆதரவில் சஞ்சிகைகள், புத்தகங்கள், பத்திரிகைகள் கண்காட்சி ஒன்றை ராயல்கல்லூரி மண்டபத்தில் மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா ஆரம்பித்து வைத்தார். 42 பிரதிநிதிகள் இது சம்பந்தமான கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

# சைக்கிளில் இருவர் செல்ல அனுமதி

## மயிலிட்டிகிராமசபை நடவடிக்கை

மாவிட்டபுரம், திங்கள்

அரசாங்க வர்த்தமானியின் விளம்பரப்படி, மயிலிட்டிக் கிராமச் சபை எல்லைக்குள் துவிச்சக்கர வண்டியில் இருவர் பிரயாணம் செய்ய இருந்த தடை நீக்கப்பட்டுள்ளதென, மயிலிட்டிக் கிராமச் சங்கத் தலைவர் திரு. ச. ஸ்ரீ பாஸ்கரன் பொது மக்களுக்குத் துண்டுப்பிரசுரத்தின் மூலம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலுள்ள 71 பாடசாலைகளிற் கல்வி பயிலும் 2400 மாணவர்களின் சார்பில் இருவர் துவிச்சக்கர வண்டியில் பிரயாணம் செய்ய இருந்த தடைச் சட்டத்தை நீக்குமாறு திரு. பாஸ்கரன் பிரதம மந்திரிக்கு ஒரு மகஜர் அனுப்பியிருந்தார். இவ்விஷயமாக மேலும் அவர் பல மந்திரிமார்களையும், நிரந்தரக் காரியதரிசிகளையும்பேட்டி கண்டார். இவற்றின் விளைவாக துவிச்சக்கர வண்டியில் இருவர் செல்வது சம்பந்தமான சட்டத்தை அமுலாக்குவதையோ, அகற்றுவதையே அவ்வப்பகுதி உள்ளூர் ஆட்சி மன்றங்களின் பொறுப்பில் விடுவது என்ற முடிவு ஏற்பட்டுள்ளது. இதனை ஏனைய வடமாகாண உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கும் தெரியப்படுத்தி அவைகளும் இவ்வாய்ப்பைப் பயன் படுத்துமாறு திரு. பாஸ்கரன் ஒரு வேண்டுகோள் விட்டுள்ளார்.


ஒருபோதும் கிடைக்காத மிகச் சிக்கனமான

பொஸ்

BOSS

மண்ணெண்ணெய் அடுப்புகள்



சமையல் அடுப்பு - 20U —2 பர்னர்கள்

சமையல் அடுப்பு - 27U —2 பர்னர்கள்

சமையல் அடுப்பு - 37U —3பர்னர்கள்

பொஸ் புகை பிடிக்காது, நாற்றம் அடிக்காது, கரி படியாது, சுலபமான இயக்கம்.

விசாரணைகளுக்கு: CWE சி.டப்ளியூ.ஈ. 40, மக்கலம் ரோட், ஸி.டப்ளியூ.ஈ. கடை, மருதானை மற்றும் வெளியூர் டிப்போக்கள்.


# காங்கேசன் சிமிந்து தொழிற்சாலை தூசுகள்

## வெற்றிலை பயிருக்கும் அபாயமாம்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன் துறை சிமிந்து தொழிற்சாலையில் உள்ள புகைக்குழாயில் இருந்து வெளிக்கிளப்பும் தூசி காங்கேசன் துறைப் பகுதியில் உள்ள மக்களுக்கு பெரும் ஆபத்தை விளைவித்துக்கொண்டு வருகிறது.

இத்தொழிற்சாலை ஆரம்பமாகிய கடந்த 10 வருட காலமாக இப்பிரச்சினை ஓர் தீராத பிரச்சினையாக இருந்து வருகிறது.

காங்கேசன்துறையில் சிமேந்துத் தொழிற்சாலை நிறுவப்பட்ட காலம்தொட்டு இன்று வரை இப்பகுதியில் உள்ள வெற்றிலைச் செய்கை படிப்படியாகப் பாதிக்கப்பட்டுதற்பொழுது மிகவும் மோசமான கட்டத்தை அடைந்துள்ளது. இது பற்றிகாங்கேசன் துறைப்பகுதி கமக்காரர்களும் மற்றும் அயல் கிராமங்களில் உள்ள கமக்காரர்களும் அரசாங்கத்துக்குப் புகார் செய்துள்ளபோதிலும் அரசாங்கம் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இத்தொழிற்சாலையின் தூசி அக்கம்பக்கத்தில் உள்ள செடிகளில் படுவதினல் விவசாயிகளுக்கு கஷ்டத்தைக் கொடுத்திருப்பது ஒருபுறமிருக்க செடிகள் செழித்து ஓங்கி வளரமுடியாமல் வரவர குன்றிக் குட்டையாக வருவதாக இப்பகுதி மக்கள் அரசாங்கத்துக்கு புகார் செய்துள்ளனர்.

இந்த நிலைமைக்குப் பரிகாரம் காணத்தவறினல் நாளடைவில் இங்கு வெற்றிலைப்பயிர் செய்கையை நம்பிவாழும் ஆயிரக்கணக்கான மக்களின் எதிர்காலம் மிக மங்கலாக இருக்குமென அவர்கள் அஞ்சுகின்றனர்.

தென்மேற் பருவப்பெயர்ச்சிக் காற்று வீசும் காலங்களில் இத்தூசி காங்கேசன் துறை அரசினர் ஆஸ்பத்திரிக் கட்டிடங்களில் படிவதால் ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளிகளுக்கும் பெரும் ஆபத்தை விளைவித்து வருகிறது. முக்கியமாக இத்தூசியினல் இவ்வைத்திய சாலையில் உள்ள காசநோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

---

# 3000 மாணவருக்கு என்ஜினியரிங் பயிற்சி

சென்னை, நவ 27

"என்ஜினியரிங் ஸ்தாபனங்களிலிருந்தும் பயிற்சி ஸ்தாபனங்களிலிருந்தும் தெரிந்தெடுக்கப்பட்ட 3000 மாணவர்களுக்கும் சிறிது நேரப்பயிற்சி யளிப்பதற்கான ஒரு திட்டத்தை பாதுகாப்பு இலாகா வகுத்திருக்கிறது. இத்திட்டம் தேசம் பூராவும் செயல்படும்" என்று யூனியன் பாதுகாப்பு இலாகாவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் பி. டி. கபூர் இங்கு கூறினர்.

தேசம் பூராவும் 26 பயிற்சி ஸ்தாபனங்கள் நிறுவப்படும் என்றும் அவர் சொன்னர்.

1963-ல் என்ஜினியரிங் கன்வென்ஷன் ஒன்றை நடத்த பாதுகாப்பு இலாகா திட்டமிட்டிருப்பதாகவும் அவர் கூறினர்.

# "எதிரி பொங்கல் பானையை தரையில் மோதினர்"

## ஆலய உற்சவத்தை குழப்பியதாக வழக்கு

யாழ்ப்பாணம், திங்கள்
ஆலய உற்சவம் ஒன்றைக் குழப்பியதாயும், பொருட்களுக்குச் சேதம் விளைவித்ததாயும் புங்குடுதீவைச் சேர்ந்த வி. கதிர்காமு என்பவர் மீது ஊர்காவற்றுறைப் பொலிசார் குற்றஞ்சாட்டினர்.

மாஜிஸ்டிரேட் திரு. அரசவால்டன் முன்னிலையில் நடைபெற்ற இந்த வழக்கில் புங்குடுதீவைச் சேர்ந்த வர்த்தகர் தம்பையா சண்முகம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"சம்பவ தினத்தன்று கண்ணகையம்மன் கோவிலுக்குமுன் பொங்கல்வைத்து அம்மனுக்குப் பிரார்த்தனை செய்தேன். அங்கு ஒரு கூட்டம் இருந்தது. எதிரி அங்கு வந்து கிணற்றில் விழுந்தார். ஆறுமுகம் அங்கே வந்து எதிரி கிணற்றில் விழுந்துவிட்டதாய்க் கூறினர். அவரை வெளியே எடுக்குமாறு நான் கூறினேன் எதிரி மேலேவந்து பொங்கல் பானையை எடுத்து தலரயில் அடித்தார். பானை உடைந்து அதிலிருந்து சோறு சிதறுண்டது.

பித்தளைப் பானையையும் அவர் தண்ணீருடன் தரையில் மோதினர். அது சேதமடைந்தது. பின் அங்கிருந்த ஒரு விளக்கை எடுத்து அங்கிருந்தவர்களை விரட்டினர். இது பற்றி நான் கிராமவிதானையிடம் புகார் கூறினேன். சேதமடைந்த விளக்கு 20 ரூபாய் மதிப்புள்ளது. பித்தளைப்பாத்திரம் 30 ரூபாய் மதிப்புள்ளது. அங்கிருந்த பித்தளைப் பாத்திரங்கள் சில அங்கு கூடி இருந்தவர்களால் அகற்றப்பட்டன. 100 ரூபாய்க்கு சேதம் ஏற்பட்டிருக்கும். கோர்ட் தீர்மானத்தின்படி எவ்வளவு தொகையையும் நான் பெற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கிறேன்." மாஜிஸ்டிரேட் எதிரியை ரூபா 50 கொடுக்குமாறு கூறி, அவரை விடுதலை செய்தார்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம் சீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

## பாக். விமானங்கள் அத்துமீறல்

புதுடில்லி, நவ 27
இவ்வாண்டு பாகிஸ்தான் விமானங்கள் இந்தியாமீது 19 தடவைகள் அத்துமீறிப் பறந்தன என்றும், சென்ற ஆண்டு 16 தடவைகள் பறந்தன என்றும் பாதுகாப்பு மந்திரி திரு. கிருஷ்ணமேனன் கூறினர்.

---

புதுடில்லி, நவ 27
ஹைதராபாத்தில் விமானப் படைக்கல்லூரி ஒன்றை நிறுவும் யோசனை பரிசீலிக்கப் பட்டுவருவதாய் பாதுகாப்பு மந்திரி திரு. கிருஷ்ணமேனன் அறிவித்தார்.


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொ
ல
ர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே !
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய்ப் பொன்னாட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது !

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினியம் இண்டஸ்ரீஸ் லிமிட்
மாவிட்டபுரம், யாழ்ப்பாணம்
J. D


# மொழி பெயர்க்கப்படும் சிங்கள கலைச்சொற்கள்

## ஒரே விதமாய் இருக்க உதவி ஆடிட்டர் ஜெனரல் கருத்து

கொழும்பு, திங்கள்
ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்படும் சிங்களக் கலைச் சொற்கள் ஒரேவிதமாய் இருப்பது அவசியமென்றும், இதனால் இலாகாக்களிலுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு அர்த்தம் புரியாத சங்கடம் ஏற்படாதென்றும் உதவி ஆடிட்டர் ஜெனரல் திரு. வைரவப்பிள்ளை ஆடிட் அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறர். ஆடிட் இலாகாவில் ஆங்கிலச் சொற்களிலிருந்து மொழிபெயர்க்கப் பட்ட சிங்களக் கலைச் சொற்கள் விஷயமாக சமீபத்தில் ஏற்பட்ட குழப்பத்தை முன்விட்டே இவ்விதம் அவர் கூறியுள்ளார்.

## எஃகு உற்பத்தி

புதுடில்லி, நவ. 27
கடந்த ஜூலை மாதம் முதல் அக்டோபர் வரை இந்தியாவில் 9,78,000 மெட்ரிக் டன் எடையுள்ள எஃகு உற்பத்தி செய்யப்பட்டதாக எஃகு மந்திரி சர்தார் சுவர்ணசிங் கூறினர். சென்ற வருடத்தைப் பார்க்கிலும் இது அதிகம் என்றும் அவர் கூறினர்.

## ஆளும் கட்சியின் வருடாந்த மகாநாடு

இரத்தினபுரி, செவ்வாய்
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்த மகாநாடு டிசம்பர் மாதம் இரண்டாம், மூன்ரும் திகதிகளில் இரத்தினபுரியில் நடைபெறவிருக்கிறது. இதற்கான ஒழுங்குகள் யாவும் இறுதியாக செய்து முடிக்கப் பட்டுவிட்டன. சிவாலி மத்திய கல்லூரியில் நடைபெறவிருக்கும் இந்த மகாநாட்டில் சுமார் 2500 பிரதிநிதிகள் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர்கள் வந்து தங்கியிருப்பதற்கென வாடிவீட்டில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளன. இரத்தினபுரி நகரம் முழுவதும் நீலவர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மகாநாட்டின் முடிவில் இரத்தினபுரி முற்றவெளி மைதானத்தில் பொதுக் கூட்டமொன்று நடைபெறும். இக்கூட்டத்தில் பிரதம மந்திரியும் கட்சியின் இதர முக்கியஸ்தர்களும் பேசுவார்கள்.

## ஜனசமூக நிலயத்தின் அவசியம்

### உக்குவளை கி. ச. தலைவர் பேச்சு

மாத்தளை, திங்கள்
உக்குவளையைச் சேர்ந்த மானும்பொடையில் "இக்பால்" ஜனசமூக நிலையம் ஒன்றை இப்பகுதி கிராமச்சங்க தலைவர் திரு. யு. எல் எம். மஜீத் திறந்து வைத்து பேசியபோது கூறியதாவது:

"உலகில் முன்னேற்றம் அடைந்திருக்கும் நாடுகளிலெல்லாம் முக்கிய இடம்பெறுவது ஜனசமூக நிலையங்கள் என்பதை நாம் அறிகிறோம். நமது நாட்டினரும் அந்நிலையங்களின் முக்கியத்தை உணர்ந்து நடக்க வேண்டும்".

ஜனசமூக நிலையங்களைத் திறந்தால் மாத்திரம் போதாது அதனுல் ஏற்படும் நன்மைகளை அறிந்து நாம் யாவரும் ஒற்றுமையுடன் செயல் புரியவேண்டும்.

திரு. எஸ். ஏ. லெனது ஆசிரியரும் பேசினர்.

பின்வருவோர் உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

எம். ஐ எம். இபுராகீம் தலைவராகவும், எம். ஏச். எம். சித்திக் செயலாளராகவும், ஹாசீம் பொருளாளராகவும், தெரிவுசெய்யப்பட்டனர்.

## மாத்தளையில் கவியோகி

மாத்தளை, திங்கள்
சனிக்கிழமை காலை 11 மணியளவில் மாத்தளை ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தில் தவயோகி சுத்தானந்த பாரதியாருக்கு ஒரு வரவேற்பு உபசாரம் திரு. எம். ஆர். இராஜ தலைமையில் நடைபெற்றது.

ஏராளமானேர் கலந்து கொண்டனர்.

## உணவு உற்பத்திக் கிணறுகள்

யாழ்ப்பாணம், செவ்வாய்
யாழ்ப்பாண மாவட்டத்தில் உணவு உற்பத்தித் திட்டத்தின்கீழ் கிணறுகள் வெட்டுவதற்கான மானியத்துக்கு அவ்வப்பகுதி காரியாதிகாரிகளால் விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கிணறு வெட்டவிருக்கும் காணி 4 பரப்புக்குக் குறையாமலும் 5 ஏக்கருக்கு மேற்படாமலும் இருக்கவேண்டுமென நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 15ம் திகதி விண்ணப்பக் கடைசித் தினமெனத் தெரிகிறது.

# சீனதூதரகத்தின்முன் ஆர்ப்பாட்டம்

## பம்பாயில் 11 பேர் கைது

### எல்லைப் பாதுகாப்புபற்றி நேரு விளக்கம்

பம்பாய், நவ. 28
இந்திய பிரதேசத்தில் சீனர்கள் புதிதாக ஆக்கிரமிப்பு நடத்தியிருப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்து ஜனசங்க கட்சியின் ஆதரவாளர்கள் நேற்று பம்பாயிலுள்ள சீனதூதர் காரியாலயத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தூதர் காரியாலயத்தை ஆர்ப்பாட்டக்காரர் நெருங்காவண்ணம் பொலிசார் தடுப்பு நடவடிக்கை மேற்கொண்டனர். பொலிசாரின் தடையையும் மீறி தூதர் காரியாலயத்தை நெருங்க முயற்சி செய்த ஆர்ப்பாட்டக்காரர்களில் பதினெருபேர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்று புதுடில்லியில் நடைபெற்ற காங்கிரஸ் பார்லிமென்டரிக் கட்சிக் கூட்டத்தில் பிரதமர் நேரு பேசுகையில் சீன ஆக்கிரமிப்பு பற்றிக் குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

லடாக் பகுதியில் சீனர்கள் புதிதாக கண்காணிப்பு நிலைகள் அமைத்துள்ள இடங்கள் மேடு பள்ளமானதாக இருப்பதுடன் மிக உயரமாக இருப்பதால் சரியான விபரங்களை அறிந்து கொள்வது கடினமாக இருக்கிறதென பிரதமர் தெரிவித்ததாக அறியப்படுகிறது.

எல்லைப் பாதுகாப்பு நடவடிக்கையாக சாலைகள் அமைக்கப்பட்டு வருவதாவும் பிரதமர் நேரு தெரிவித்தார்

# வடக்கு கிழக்குப் பகுதிகள் அபிவிருத்தி

## தமிழ்க் காங்கிரஸின் புதிய திட்டம்

யாழ்ப்பாணம், புதன்
வடகிழக்கு மாகாணங்களை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் விரைவில் யாழ்ப்பாணத்தில் ஒரு மகாநாடு கூட்டவிருக்கிறது.

தனது அபிவிருத்தித் திட்டங்களுக்கு பொதுமக்களுடைய ஆதரவைத் திரட்டுவதற்காக நாட்டின் பல பகுதிகளிலும் பொதுக் கூட்டங்களை நடத்த காங்கிரஸ் திட்டமிட்டுள்ளது.

மொழிப் பிரச்னைக்கும் இதர முக்கிய பிரச்னைகளுக்கும் தீர்வுகாண்பதற்குரிய வழிவகைகளை ஆராய்வதற்கு பொறுப்பான தமிழ்ப் பிரமுகர்களைக் கொண்ட ஒரு மகாநாட்டைக் கூட்டப்போவதாக காங்கிரஸ் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த வட்டமேசை மகாநாட்டுக்கு தமிழரசுக் கட்சியினரும் அழைக்கப்படுவார்களென்று தெரிவித்தார்.

காங்கிரசின் வட்டமேசை மகாநாடு பற்றி தங்களுக்கு இதுவரை எதுவித அழைப்பும் வரவில்லையென்று தடை செய்யப்பட்டுள்ள தமிழரசுக் கட்சியின் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## அச்சுவேலியில் திருடர் கைவரிசை

அச்சுவேலி, செவ்வாய்
அச்சுவேலியைச் சேர்ந்த கதிரிப்பாய் என்னும் கிராமத்தில் கடந்த சனிக்கிழமை இரவு 16 வீடுகளில் திருடர்கள் உள்ளிட்டு களவாடிய திடுக்கிடும் சம்பவம் நடைபெற்றிருக்கிறது. ஒரே இரவில் இச்சம்பவம் நடைபெற்றிருந்தும்கூட சந்தேக நபர் எவரும் அகப்படவில்லையாம்.

இவ்வீடுகளில் அன்றைய தினம் பல பொருள்களும் ரொக்கமும் திருடப்பட்டிருக்கின்றன.

இதை இரவில் அச்சுவேலி தெற்கிலும் ஒரு வீட்டில் திருட்டுச்சம்பவமொன்று நடைபெற்றிருப்பதாகத் தெரிகிறது.

## முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், செவ்வாய்
கந்தரோடை முத்தமிழ்மன்றம் திருமுறை விழா ஒன்றினை நடாத்த முடிவுசெய்துள்ளது

# ‘இலங்கையை தாய்நாடாக கருதுங்கள்’

## மலைநாட்டு மக்களுக்கு கவியோகி புத்திமதி

நாவலப்பிட்டி, திங்கள்

நாட்டின் செல்வமும் முன்னேற்றமும் தொழிலாளர் கையிலேதானுள்ளதென்றும் இலங்கையிலுள்ள தோட்டத் தொழிலாள மக்கள் இலங்கையை தங்கள் தாய்நாடாக கருத வேண்டுமென்றும் யோகி சுத்தானந்த பாரதியார் கூறினர். திரு. தொண்டமானை அவர் ‘தோட்டமான்’ என்று வர்ணித்தார்.

கொத்மலையைச்சேர்ந்த உனுகலோயா இராசாத் தோட்டத்திலுள்ள ஸ்ரீமுத்துமாரியம்மன் கோவிலின் புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா கோலாகலமாக நடைபெற்றது. கவியோகி சுத்தானந்த பாரதியார் நறுமலர் தூவி, ஐம்பொன் பதித்து, தமது பெயரும் ஆண்டும் திகதியும் பொறித்திருந்த அடிக்கல்லை பக்தர்களின் கோஷங்களின் மத்தியில் நாட்டினர். அதைத்தொடர்ந்து திரு. எஸ். தொண்டமான் எம். பி., திரு. ஜே. டி. வீரசேகரா எம். பி., ஜனப்ரஅலிஸ், ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா ஆகியோரும் கல் நாட்டி நல்லாசி கூறினர்.

யோகி சுத்தானந்த பாரதியார் இவ் விழாவில் பேசுகையில் கூறியதாவது:-

உங்கள் அன்பு கலந்த வரவேற்பிற்கு நன்றி. இலங்கையையே உங்கள் தாய்நாடாக கருதி வாழ்க்கையை சீராக அமைத்துக்கொள்ளுங்கள். எந்த சக்தியும் இந்நாட்டிலிருந்து உங்களை வெளியேற்ற அடியாது, எல்லா மதத்தவர்களும், இனத்தவரும் ஐக்கியமாக வாழ்வதற்கே மதங்கள் வழிகாட்டுகின்றன. ஸ்ரீதொண்டமானை தோட்டமான் என்றே கூறுவேன். ஏனெனில் தோட்டத்தொழிலாளர்களுக்கு அவர் செயது வரும் ஒப்பற்ற சேவையை அறிந்திருக்கிறேன். சமீபத்தில் ரஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் தொழிலாளர் கூட்டமொன்றில் கூட ஸ்ரீ தொண்டமான் தொழிலாளர்களுக்கு செய்யும் சேவையை உதாரணம் கூறி தெளிவுபடுத்தினேன்.

தெய்வத்திற்கு அடுத்த படியாக உள்ளவர் தொழிலாளர் தான். தொழிலாளர் இன்றி எக்கருமமும் செயல்படாது. நாட்டின் செல்வமும் முன்னேற்றமும் தொழிலாளர்களின் உழைப்பில்தான் தங்கியிருக்கிறது. இந்நாட்டில் உள்ள தமிழ் சிங்கள மக்களின் உறவு பலப்பட்டால் நாட்டின் முன்னேற்றம் பல மடங்கு அதிகரிக்கும்.

## “தொழிலாளர்கள் தோட்டங்கள் வாங்கவேண்டும்”

நாவலப்பிட்டி, திங்கள்

“மலாயாவிலுள்ள தொழிலாளர்களும் உங்களைப் போன்ற கஷ்டங்களின் மத்தியில் தான் வாழ்ந்தனர். ஆனால் அவர்கள் சேமிப்பின் மூலம் இப்பொழுது பல தோட்டங்களை வாங்கி வருகின்றனர் நீங்களும் அப்படி கூட்டுறவு முறையில் தோட்டங்கள் வாங்க வேண்டும். தொழிலாளர்களுக்கு தோட்டங்கள் சொந்தமானால் தான் உங்கள் எதிர்காலம் சிறப்புடையதாக மலரும்”.

இவ்வாறு கவியோகி சுத்தானந்த பாரதியார் கொத்மலையைச் சேர்ந்த வெஸ்ஹோல் தோட்டத்தில் நடைபெற்ற வரவேற்பு கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

உங்கள் உழைப்பினால் கிடைக்கும் வருமானத்தை வீட்டில் பயன்படுத்துங்கள். கள்ளுக்கடைகளுக்குப் போக வேண்டாம். உங்கள் எதிர்காலத்திற்கு சேமியுங்கள். கடன் வாங்கும் பழக்கம் கூடாது. உங்கள் பிள்ளைகளை கல்வி கற்க செய்யுங்கள்.

ஆடம்பரமாக கலியாணம் முதலான வைபவங்கள் செய்ய வேண்டாம். பணம் இல்லாதவனுக்கு இவ்வுலகில் மதிப்பில்லை. மற்றவர்களும் உங்களை மதிக்கும் வகையில் நல்ல சுத்தமான ஆடையணிந்து செல்லுங்கள். இறைவன் நாமத்தை ஜெபிப்பதுடன் தொழில் செய்யுங்கள். நீங்கள் விரும்பியதை முருகன் தருவார். கடவுளை நம்பினோர் கைவிடப்படார். உங்கள் மனையாள் மனங்குளிர அன்பாக நடத்துங்கள். போட்டி, பொறாமை, சண்டைகளால் தேடிய பணத்தை கோட்டுக்கும், வக்கீலுக்கும் கொடுக்க வேண்டாம். இன்று முதல் உங்களுக்கு புதுவாழ்வு மலர வேண்டும்.

### பொன் கொழிக்கும் நாடு இது

இந் நாட்டு அரசாங்கம் உங்களுக்கு விரைவில் நன்மை செய்யப் போகின்றது. இது உண்மை. இதுபற்றி தலைவர்கள் பலர் பேச்சுவார்த்தைகள் நடத்துகின்றனர். இந்தியா சுவர்க்க பூமியென்று கருதி ஏமாற வேண்டாம். இந்த நாடுதான் பொன் கொழிக்கும் அழகான நாடு. பொறுமையை கடைப்பிடித்து உரிமையை பெறுங்கள். தினசரி உங்கள் வாழ்க்கையை திட்டமாக நடத்துங்கள். சமயஅனுஷ்டானங்கள் சரிவர கடைப்பிடிக்கப்பட்டால் எல்லா நன்மைகளும் கிடைத்துவிடும். தொழில் செய்யும் போது காதல், சீட்டை அடிப்பது, அரட்டையடிப்பது கூடாது. பெண்களை ‘ஓம் சக்தி’ என்று கூறி வணங்குங்கள்” என்றும் அவர் கூறினர்.

திரு. டி. செல்லையா நன்றியுரை கூறினர்.

---

## சிறுபொருள்களை ரஷ்யா வாங்கும்

கொழும்பு, செவ்வாய்

இலங்கையின் சிறு உற்பத்திப் பொருள்களை வாங்குவதற்கு ரஷ்யா ஒப்புக்கொண்டுள்ளது.

---

## உணவுப் பொருள்களுக்கு புதிய புகை மருந்து

கொழும்பு, செவ்வாய்

இங்கு இறக்குமதி செய்யப்படும் உணவுப்பொருள்களுக்கு கிருமிநாசினிப் புகையூட்டுவதற்காக இப்பொழுது உபயோகிக்கப்பட்டுவரும் மருந்துவகைகளுக்கு சுகாதார இலாகா அதிக செலவுசெய்யவேண்டியிருப்பதால் குறைந்தவிலையில் வாங்கக்கூடியதும் அதிக ஆபத்து இல்லாததுமான ஒரு புகை மருந்தை உபயோகக்க சுகாதார இலாகா ஆலோசனை செய்துவருகிறது.

‘மித்தில் புரோமைட்’ என்ற புதிய புகை மருந்தை உபயோகிப்பதால் வருடமொன்றுக்கு சுகாதார இலாகா ரூ. 6 லட்சம் மிச்சப்படுத்தலாமென கருதப்படுகிறது.

---

## முன்னாள் தூதரும் கைது

கெய்ரோ, நவ. 28

ஜனாதிபதி நாஸரைக் கொலை செய்ய முயன்றதாயும் உளவறிந்ததாயும் கைது செய்யப்பட்டவர்களில் 4 எகிப்தியரும் இருக்கின்றனர். இவர்களில் ஒருவர் லண்டனில் முன்னாள் எகிப்திய தூதராய் இருந்தார். இவர்கள் பிரெஞ்சு உளவாளிகளுக்கு ரகசியத் தகவல்கள் கொடுத்ததாய்க் குற்றஞ் சாட்டப்பட்டனர்.

---

## கருணாநிதி தஞ்சையில் போட்டியிடுவார்

சென்னை, நவ. 28

திராவிடமுன்னேற்றக்கழகப் பொருளாளர் திரு. மு. கருணாநிதி வரும் தேர்தலில் தஞ்சை சட்டசபை தொகுதியில் போட்டியிடப் போவதாகத் தெரிவித்தார்.

இதே தொகுதியில் காங்கிரஸ் சார்பில் திரு. பரிசுத்த நாடார் போட்டியிடவிருப்பதாக நம்பகமாக அறியப்படுகிறது.

---

## ககாரின் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பராய், புன்னாலைக்கட்டுவன், வசாவிளான் வழியாக விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படுவர். இவ்வழியாக செல்வதால் பலர் இவர்களைப் பார்க்க முடியும். இந்த வழியாகச் செல்லும் போது மாணவர்கள் கூடி நின்று இவர்களுக்கு வரவேற்பளிப்பார்கள். மாணவர்கள் கூடும் இடங்களில் ஜீப் சில நிமிட நேரம் நிறுத்தப்படும்.

யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண நகர மேயர், மேஜர் ஜூரிககாரினையும் திருமதி ககாரினையும் யாழ்ப்பாண நகர மண்டபத்தில் வரவேற்பார். கல்லூரி ஒன்றின் சிரேஷ்ட மாணவர் தலைவர் மேஜர் ககாரினுக்கும் திருமதி ககாரினுக்கும் வரவேற்புப் பத்திரத்தை வாசித்தளிப்பார். நாதஸ்வரக் கச்சேரியொன்று வரவேற்பு வைபவத்தில் இடம் பெறும்

பின்னர் மேஜர் ககாரின் தம்பதிகளுக்கு யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் லெப்டினன்ட் கேர்னல் ஏ. ஆர். உடுகமவின் வாசஸ்தலத்தில் மத்தியான போஜன விருந்தளிக்கப்படும்.

அன்று பிற்பகல் 2-30க்கு வானவெளி வீரரும் மனைவியும் விமான நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்படுவர்.

---

## மாஜிஸ்டிரேட் கோர்ட்டில் சார்ஜனைத் தாக்கினராம்

### மாவட்ட நீதிமன்றத்தில் தீர்ப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பொலிஸைச் சேர்ந்த சார்ஜன்ட் எஸ். வாமதேவனை யாழ்ப்பாணப் பகுதியைச் சேர்ந்த பி. குமாரசாமி என்பவர் தாக்கியதாகக் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி திரு. என். கிருஷ்ணதாசன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

வழக்கை சப் இன்ஸ்பெக்டர் திரு. ரணசிங்கா தொடர்ந்திருந்தார்.

சார்ஜன்ட் வாமதேவா சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

நவம்பர் 14-ம் திகதி நான் கோர்ட்டில் கடமையிலீடுபட்டிருந்தபோது எதிரி குடிவெறியில் உரத்த குரலில் பிதற்றிக் கொண்டிருந்தார். அப்பொழுது மாஜிஸ்டிரேட் அவரைக்கூட்டி வரும்படி உத்தர விட்டார். நான் எதிரியைக் கூட்டிவரச் சென்றபோது எதிரி வெளியே செல்ல எத்தனித்தார். நான் அவரைப் பின் தொடர்ந்து சென்றபோது அவர் உடனே திரும்பி எனது கழுத்தைப் பிடித்து என்னைத்தாக்கினர் சில நிமிட நேரத்தில் நான் சப் இன்ஸ்பெக்டர் ரணசிங்கா, பொலிஸ் கான்ஸ்டபிள் குமாரதீன் ஆகியோரின் உதவியுடன் அவரை அடக்கினேன்.’

எதிரிதான் குற்றவாளியென ஒப்புக்கொண்டு, சார்ஜன்ட் வாமதேவனைத்தாக்கியபின்னர் தம்மை பல பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் தாக்கியதாகக் கூறி நீதிவழங்குமாறு நீதிபதியிடம் கேட்டார்.

கடமையாற்றிக் கொண்டிருந்த பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவரைத்தாக்கினல் இவ்விதம் நேருமென அவர் எதிர்பார்த்திருக்க வேண்டுமென நீதிபதி கூறி டிசம்பர் 6-ம் திகதி அவரை கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டார்.

---

## விவசாய அதிபர்

கொழும்பு, செவ்வாய்

விவசாய இலாகா அதிபர் திரு. ஏ. வி. ரிச்சார்ட், இஸ்ரேல் சென்றுள்ளார். அங்குள்ள விவசாய நிலைகளை நேரில் அறிந்துவரவே அவர் சென்றிருக்கிறார்.

---

## 10 லட்ச ரூபாய் கட்டிடம்

தொணியகல, செவ்வாய்

அத்துல்கம கோரளைப் பகுதியில் பத்தன்கல என்ற இடத்தில் சுமார் பத்து லட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட விவசாயப் பயிற்சிப் பாடசாலைக் கட்டிடம் கடந்த பல வருடங்களாக உபயோகிக்கப்படாமல் இருந்து வருகிறது.

---

## குடும்பக் கட்டுப்பாட்டு இயக்கம்

கொழும்பு, செவ்வாய்

சுவீடன் அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் செய்துகொண்ட ஒரு உடன்படிக்கையின் கீழ் இலங்கையில் குடும்பக் கட்டுப்பாட்டு இயக்கம் தீவிரப்படுத்தப் படவிருக்கிறது.

---

## மரண அறிவித்தல்

யாழ்ப்பாணம் கந்தர்மடம் வை. ஆ. செல்லத்துரை அவர்களது அருமைத் தாயார் 28-11-61 செவ்வாய்க் கிழமை பிற்பகல் 4மணியளவில் தேகவியோகமாயினர். அன்னரது ஈமக்கிரியை இன்று (29-11-61) புதன்கிழமை 4 மணி அளவில் கோம்பையன் மணல் மைதானத்தில் நடைபெறும்.

வை. ஆ. செல்லத்துரை
138, அரசடி ரோட், கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

---

## தியேட்டர் செய்திகள்

யாழ்ப்பாணம் வெலிங்டன்
நாகேஸ்வரராவ் நடித்த
எங்கள் செல்வி

●

யாழ்ப்பாணம் மனோகரா
பிரேம் நாத், சித்ரா நடித்த
குவாடில்

●

சாவகச்சேரி தேவேந்திரா
ஜெமினி கணேசன் நடித்த
களத்தூர் கண்ணம்மா


இப்பொழுது திரையிடப்படுகிறது!
சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின்
மகத்தான வெளியீடு!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) வெம்பிளி (கண்டி)

நாகேஸ்வரராவ், அஞ்சலிதேவி, பாலையா
நடித்த




மனோஹரா (யாழ்ப்பாணம்) மாலை 6-30 இரவு 9-30
பிரேம்நாத், சித்ரா
நடித்த
குவாடில்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவாசனது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு நவம்பர் மாதம் 29ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.